www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 0,70

★ மாதமிரு இதழ் ★ இதழ் 388 ★ 1988 செப்டம்பர் 30 வெள்ளிக்கிழமை


## ''போர்த் இன்டர்நஷனல்'' விடுவிப்பதற்கான பிரச்சாரம்.

**சஞ்சிகை மீதான '' தடை உத்தரவை இரத்துச் செய்து சஞ்சிகையை உடன் கையளிக்கவும்.''**

**— போர்த் இன்டர்நஷனல் ஆசிரியர் டேவிட் நோர்த் தந்தி**

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தத்துவார்த்த சஞ்சிகையான 'போர்த் இன்டர்நஷனல்' இனவாத யூ.என்.பி. ஆட்சியாளர்களால் பறிமுதல் செய்யப்பட்டதை கண்டித்து அதன் ஆசிரியரும் அமெரிக்க வேர்க்கர்ஸ் லீக் தேசிய செயலாளருமான டேவிட் நோர்த் இராஜாங்க

★ 6ம் பக்கம் பார்க்க

# பர்மாவில் மக்கள் எழுச்சி!

# தொழிலாளர்களுக்கு எதிரான இராணுவச் சதி!

பர்மாவில் தொழிலாள, மாணவ இளைஞர் எதிர்ப்போர் பல வாரங்களாக நடத்திவரும் பாரிய பிரசாரத்தினை இரத்தக் களரிக்குள் மூழ்கடித்து இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டும் நோக்குடன் பர்மா இராணுவம் கடந்த திங்களன்று ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது.

புதிய ஆட்சியாளர் வீதி ஊர்வலங்களை தடைசெய்து நால்வருக்கு மேல் கூடியிருத்தல் சட்ட விரோதமாகும் என விடுத்த உத்தரவையும் மீறி, ஆயிரக்கணக்கான மக்கள் செப்டெம்பர் 19ம் திகதி வீதியில் இறங்கினர். இரத்த வேட்கை மிக்க இராணுவம் ஆத்திரமூட்டலை ஆரம்பித்த முதல் தினத்தில், ரங்கூன் நகர அமெரிக்க தூதரகத்தின் முன்னும் பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்னும் நூற்றுக் கணக்கான மக்கள் சுட்டு கொல்லப்பட்டதுடன் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். மாணவர் இராணுவம் விதித்த வீதித் தடைகளை அகற்றி எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவதில் ஈடுபட்டனர்.

சதியொன்றின் மூலம் ஆட்சியை கைப்பற்றியுள்ளவர்கள் இராணுவ நிர்வாக சபையின் தலைவரும் பாதுகாப்பமைச்சர் போன்ற உயர் மட்டத்திலுள்ளோருமாவர். பர்மாவின் முன்னைநாள் இராணுவ சர்வாதிகாரியான நேவின் ஆதரவாளரான இவர் மாஉன் அபகீர்த்தியுள்ள இராணுவ ஆளும கட்சியான பர்மிய சோசலிச கட்சியின் தலைவராவர். 19 பேரை உள்ளடக்கிய புதிய இராணுவ யுண்டாவிற்கு ''சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டியெழுப்பும் அமைப்பு'' என பெயரிட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக அபிவிருத்தியுற்று சில வாரங்களுள் வெடித்தெழுந்த மக்கள் இயக்கம் இந்த இராணுவ ஆட்சியுடன் மிகவும் வன்முறையிலான மோதலை எதிர் நோக்கியுள்ளது.

26 ஆண்டுகளாக நேவினின் தலைமைத்துவத்தின் கீழ் நிலவிய பர்மிய இராணுவ ஆட்சியந்திரத்திற்கெதிராக வீதியிலிறங்கிய தொழிலாள, இளைஞர், மாணவர் அடங்கிய மக்கள் இராணுவ ஆட்சியை முற்றாக அகற்றுமாறு நிர்ப்பந்தித்து நின்றனர். வீதியிலிறங்கிய மக்களை விரட்டி அடக்கிவிட நேவின் அரசாங்கம் 3000க்கு மேற்பட்ட மக்களை இரத்த வெள்ளத்தில் குளிப்பாட்டி கொன்றழித்தது. அத்தகைய இராணுவ அடக்கு முறையாலது மீண்டும் இலட்சக் கணக்கான மக்களை வீதியிலிறங்கச் செய்தது.

நேவின் ஆட்சிப் பொறுப்பை கைவிட்டு கீழிறங்கினான். அவனின் பின் ஆட்சியேறிய சேன் எல்வின் இராணுவ தளபதிக்கு 17 நாட்கள் மட்டுமே நாட்டை ஆள முடிந்தது. மக்கள் எழுச்சியை சமாளித்துவிட முடியாத இடத்தில் அவன் உயர் மட்டத்தவரை கொண்ட லலதுசாரி அரசாங்கத்தின் கையில் ஆட்சியை கொடுத்து எதிர் காலத்தில் பல கட்சிமுறை ஆட்சி, தேர்தல் நடத்துவது என்று உத்தரவாதமளித்திருந்தான்.

மாணவருடன் மென்மேலும் இணைந்து கொண்ட தொழிலாளர் போராட்டத்தில் முன் நின்று உயர் மட்டத்தவரது அவர்களது உறுதிமொழிகளையும் நிராகரித்தவண்ணம் இராணுவ ஆட்சியை அகற்றக்கோரி பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். எரிபொருள், எண்ணெய், ஒயில், சணல், ஆடை, மரக்கைத்தொழில்களும் விமான சேவை தபால் உள்ளடங்கலான மக்கள் சேவைகளதும் தொழிலாளர்கள் பொதுவேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதுடன் சில பகுதிகளில் மக்கள் வாழ்வினை நிர்வகிக்க தொழிலாள, மாணவ, மதகுருமார், முதலாளித்துவ கட்சி அங்கத்தவர்களை கொண்ட ''பிரதேசப் பாதுகாப்பு சபை'' கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

பர்மாவின் மக்கள் எழுச்சியானது, ஆசியாவுள்ளடங்கலாக உலகெங்கும் ஏகாதிபத்திய அடக்குமுறையினுல் நசுங்கும் அரைக் காலனித்துவ நாடுகளில் வெடித்தெழுந்து வரும் புரட்சிகர போராட்ட அலைகளின் பூர்வ சமிக்கையாகும். அத்துடன் இந்த யுகத்தின் சகல புரட்சிகர போராட்டங்களுள்ளும் வெளிப்படும் முக்கிய அவசிய பிரச்சனையை உலக தொழிலாள வர்க்கத்தின் முன் தெட்டத் தெளிவாக முன்வைத்து உள்ளது.

முழு உப கண்டத்தையும் பாதிக்கும் மக்கள் எழுச்சியை யிட்டு பீதியுற்றுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள், இப்போதைய இராணுவ சதிக்கு முன்னர், தென் ஆசிய பற்றிய ஏஜந்தான ஸ்ரீபன் சோலார்ஸ்ஸை பர்மாவிற்கு அனுப்பியதுடன், 1962ம் ஆண்டின் இராணுவ சதிக்கு முன் முதலாளித்துவ ஆட்சியாளராக விளங்கிய ஊனுவின் தலைமையில் தற்காலிக அரசாங்கமொன்றை கட்டியெழுப்பி பின்னர் பல் கட்சிய மைப்பு முறையிலான அரசாங்கத்தை நிறுவும் யோசனையை சமர்ப்பித்தனர். ஊனுவும் பழைய முதலாளித்துவ தலைமைகளும் கூடி அமைத்த முதலாளித்துவ கட்சி முன்னணியானது மக்களியக்கத்திற்கு விலங்கிடும் பொருட்டுச் செயற்பட்டது. ஊர்வலம் செல்வோருக்கு இம் முதலாளித்துவ தலைமைகள் ''வன்செயல்களை நிறுத்துமாறும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுமாறும்'' போதித்தனர். எதிர்கால பல் கட்சி அரசாங்கத்திற்கான உயர்மட்டத்தவரது கோரிக்கையை ஏற்று மக்கள் பிரசாரத்தை நிறுத்திவிடுமாறும் முதலாளித்துவ தலைமைகள் கூறின. மக்கள் இயக்கம் ஆட்சியந்திரத்திற்கும் முதலாளித்துவ - ஏகாதிபத்திய தேவைகளுக்கும் தாக்குதலளித்தபடி அபிவிருந்தியுறுவது பற்றி இந்த முதலாளித்துவ தலைமைகள் பீதியுற்றுள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் சனநாயக முதலாளித்துவ தலைமைகள் எனப்பட்டவர்களதும் தலையீட்டின் மத்தியில் தற்போது இராணுவ சதி தொடுக்கப்பட்டுள்ளது.

பர்மாவின் தொழிலாள வர்க்கமும் வறியவர்களும்

★ ?ம் பக்கம் பா



## நான்காம் அகிலத்தின் 50வது ஆண்டு நிறைவு!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 2?வது ஆண்டு நிறைவு!

**1988 அக்டோபர் 16 மாலை 1 மணி முதல்**

**கொழும்பு மகளிர் நட்புறவுச் சங்க மண்டபம்**

ஆனந்த குமாரசுவாமி மாவத்த, கிரீன்பாத், கொள்ளுபிட்டி.

- கண்காட்சி
- கூட்டம்
- திரைப்படம் ''சார் டு லெனின்''

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளை)

**இளம் சோஷலிஸ்டுகள்**



## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய - இலங்கை உடன்படிக்கையின் ஓராண்டு!

**1987** ஜுலை 29ல் ராஜீவ் காந்தியும் ஜெ ஆர். ஜயவர்தனவும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இந்திய இராணுவத்தைக் கட்டவிழ்த்து விடும் இந்திய-இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் திட்டமிடப்பட்ட இந்த உடன்படிக்கை தொழிலாள வர்க்க இயக்கம் பூராவுமுள்ள ஸ்டாலினிச, சீர்திருத்தவாத, மத்தியவாத துரோகிகளின் பூரண ஆதரவுடன் திணிக்கப்பட்டது:

அமெரிக்கா ட்ரொட்ஸ்கிச 'புலிட்டின்' பத்திரிகையில் வெளியானது.

**— நந்த் சிங்**

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டு கொள்கை ஆக்கத்தின் ஒரு முன்னணி அமைப்பினுள் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் பற்றி சமீபத்தில் வெளியான பிரசுரங்கள் ராஜீவ் காந்தியின் 'முற்போக்கு' இந்திய முதலாளி வர்க்கத்தின் புவியியல் அரசியல் நலன்களை உள்ளடக்கிக் கொண்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை எப்படியோ இலங்கையின் கொள்கையில் ஒரு முற்போக்குத் திருப்பத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்ற புரளியை புதைகுழிக்குள் தள்ளியுள்ளது.

இம்மாதம் (செப்டம்பர்) பிரசுரிக்கப்பட்ட இக் கலந்துரையாடல்கள், இந்திய-இலங்கை உடன்படிக்கை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஒரு முக்கிய வெற்றி என்பதை அம்பலப்படுத்தி உள்ளது. வாஷிங்டனின் அமெரிக்க ஏகாதிபத்திய பிணந்தின்னிப் பிசாசுகள், இந்திய-இலங்கை ஆட்சியாளர்களுக்கு இடையேயான சதிகார உடன்படிக்கையின் மை காய்வதற்கு முன்னரே தமது விசுவாசமான ஏஜண்டுகளான ராஜீவ் காந்திக்கும், ஜூனியஸ் ஜயவர்தனவுக்கும் வாழ்த்துக் கூறக் கூடினர்.

இந்திய-இலங்கை உடன்படிக்கையைப் புகழ்ந்து பாராட்டுகையில் தமது பெருந்தன்மையை விட்டுக் கொடுக்காத இவர்கள் இதனை பாலஸ்தீனியர்களைக் காட்டிக் கொடுத்த கேடுகெட்ட காம்ப் டேவிட் உடன்படிக்கையுடன் ஒப்பிட்டனர். தமது எதிர்ப்புரட்சி சூழ்ச்சியின் வெற்றியினுல் பெருமகிழ்ச்சி கண்ட இவர்கள் இதன் சிடுமூஞ்சி கையொப்பகாரர்களை நோபல் பரிசுக்கும் சிபார்சும் செய்தனர்.

இந்த அவமானமிக்க உடன்படிக்கை ஓராண்டுக்கு முன்னர் ஜுலை 29, 1987ல் கைச்சாத்தாயிற்று. நாம் இங்கு மேற்கோள்ளாகக் காட்டப்போவது ''அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையின் ஆசிய-பசுபிக் விவகாரங்களுக்கான உபகுழுவின் முன்னலையில் 1987 ஆகஸ்ட் 6ல இடம் பெற்ற விசாரணையாகும.''

இது அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள சபையின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான கமிட்டியின் உபயோகத்துக்காக 1988 ஆகஸ்டில் அமெரிக்க அரசாங்க அச்சகத்தினுல் அச்சிடப்பட்டது. இது பத்திரங்கள் அதிகாரியினுலும், அமெரிக்க அரசாங்க அச்சகத்தின் காங்கிரஸ் விற்பனையாளர்களாலும் வாஷிங்டனின் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது;



ஜெ, ஆர். ஜயவர்தன

1987 ஆகஸ்ட் விசாரணையில் உப-குழுவின் தலைவர் நியூயோக் ஸ்ரீபன் ஜே. சோலாஸின் தலைமையில் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையின் 9 காங்கிரஸ் அங்கத்தினர்கள் பங்கு கொண்டனர். இந்த உப-குழுவின் முன் வாக்குமூலமளித்தவர்களுள் தென்னுசிய விவகாரங்களுக்கான அரசாங்க பிரதி உதவி செயலாளர் ஹெபேட் பெக்கும், மற்றும் நான்கு சிரேஷ்ட அமெரிக்க அரசாங்க உத்தியோகத்தவர்களும் அடங்குவர்.

இந்த அறிக்கை தானுக பேசுகின்றது. தமிழ் தேசிய போராட்டத்தினை நசுக்கும் எதிர்ப்புரட்சி நடவடிக்கையை அமுல் செய்யவும், இலங்கைத் தொழிலாள வர்க்கத்துக்கு மேல் ஒரு முன்னோடித் தாக்குதலை நடாத்தவும் ராஜீவ் காந்தியை திரட்டிக் கொள்வதில் தாம் கண்ட வெற்றியையிட்டு தலைநகரில் உள்ள பேராசை பிடித்த ஏகாதிபத்திய அரசியல்வாதிகளின் அளவுகடந்த திருப்தியின் ஒரு வெளிப்பாடாக இது விளங்குகிறது.

இங்ஙனம் செய்வதன் மூலம் குறைந்தபட்சம் தற்போதைக்காவது இந்தியத் துணை கண்டத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஒரு பெரும் உருமாற்றத்தின் ஏகாதிபத்திய வாதிகள தணிக்க முடிந்துள்ளது.

விவாதத்தினை ஆரம்பித்து வைக்கையில் தென் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பக்குவப்பட்ட இயக்குனர் ஸ்ரீபன் சொலாஸ் கூறியதாவது: 'நாம் இன்று இலங்கையின் சமீபகால அபிவிருத்திகளையும் இலங்கையில் உள்நாட்டு பிணக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவர இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பல்வேறு தமிழ் குழுக்களுக்கும் இடையே ஏற்பட்டதாகத் தோன்றும் அதிவிசேட உடன்படிக்கையையும் கணக்கில் எடுக்க கூடியுள்ளோம். இப்பிணக்கு ஒரு பெரும் அழகிய நாட்டின் சமூக அங்கியை சிதைத்து அழிப்பதில் நீண்ட தூரம் சென்று விட்டது. இப்புதிய உடன்படிக்கை இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதன் மூலம் பொருளாதார செழுமைக்கான அடித்தளத்தை அமைக்கும் என நம்பலாம்.

''இந்த உடன்படிக்கை இலங்கை நிலைமையில் ஒரு மாபெரும் வெற்றியாக கொள்ளப்படுகிறது. தமது இருநாடுகளிலும் உள்நாட்டு எதிர்ப்புகளை தாண்டுவதில் பிரதமர் காந்தியும் ஜனதிபதி ஜயவர்தனவும் காட்டிய திடகாத்திரமான மனஉறுதியினுல் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டு விட்டேன். ஆதலால் நான் சற்று முன்னர்தான் அவர்கள் இருபரியும் எதிர்வரும் ஆண்டுக்கான நோபல் சமாதான பரிசுக்கு நியமனம் செய்து நோபல் சமாதான பரிசு தேர்வு குழுவுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன்.''

ஏகாதிபத்திய சதியையே தொழிலாகக் கொண்ட இவர் தனது குதூகலத்தை தாங்க முடியாமல் தொடர்ந்து கூறுவதாவது: ''நான் நினைக்கின்றேன் இராஜதந்திரம் வரலாற்றில் இது விநோதமாக இல்லாது போகினும் ஒரு அசாதாரணமான அரிதான அபிவிருத்தியாகும். ஒருவர் மற்றைய உலகத் தலைவர்களிடமும் இதனுடன் ஒப்பிடக் கூடிய இராஜதந்திரத்தினையே எதிர்பார்ப்பர். சமாதானத்துக்கான ஒரு திட்டத்தினை உருவாக்கும் நலனின் பேரில் அத்தகைய ஒரு உடன்படிக்கைக்கு எதிரான கணிசமான உள்நாட்டு எதிர்ப்பினை கணக்கிலெடுக்காத அவர்களின் ஆர்வம் உண்மையில் பெரிதும் பாராட்டத்தக்கது.

''வரலாற்றுப் புகழ்மிக்க காம்டேவிட் உடன்படிக்கையை உருவாக்கிய அவர்களின் பாத்திரத்தினை தொடர்ந்து மெனுசிம் பெகினுக்கும், அன்வர் சதாத்துக்கும் அவர்கள் வழங்கிய அதே வகையிலான கணிப்பினை நோபல் சமாதான பரிசு கமிட்டி இவர்களுக்கும் வழங்கும் என நான் பெரிதும் எதிர் பார்க்கின்றேன்.''

## தென் ஆசியாவின் காம்டேவிட்

ஆதலால் அனைத்துலக பிற்போக்கு ஊற்றில் இருந்தே இதைப் பெறுகின்றீர்கள்! இது தான் தென் ஆசிய காம்ப்டேவிட். ஜயவர்தனவும் காந்தியுமே இப் பிராந்தியத்தின் பெகின்—சதாத்.



ராஜீவ் காந்தி

இந்தச் ''சிரேஷ்ட அழகிய நாட்டின் சமூக அமைப்பின்'' தவிர்க்க முடியாத சரிவு, ஏகாதிபத்திய கொலைகாரர்கள் அழுது துடிக்கும் முதலாளித்துவ சமூக அமைப்பின் சரிவே என மனங் கொள்ளுமிடத்து அவர்களின் மகிழ்ச்சிக்கான காரணத்தை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்;

அமெரிக்க ஏகாதிபத்திய கமிட்டி உறுப்பினர்களுக்கு இடையே இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை நசுக்க ராஜீவ் காந்தியை ஈடுபடுத்தியதற்கு வாஷிங்டனே கருவியாகச் செயற்பட்டுள்ளது என்பதில் எதுவித சந்தேகமுமே கிடையாது,

ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு உடன்படிக்கையின் பயன்பாட்டினை வெளிப்படுத்தும் பொருட்டு சோலாசின் ஒரு முக்கிய கேள்விக்குப் பதிலளிக்கையில் பெக், தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான இந்திய முதலாளி வர்க்கத்தின் சம்பந்தம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனின் பேரில் மட்டுமன்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலேயே தீட்டப்பட்டது என்பதை வெளியிட்டார்.

பெக் பதிலளிக்கையில் ''இந்த உடன்படிக்கையில் ஓர் முக்கிய புதிய காரணி இந்த உடன்படிக்கையைக் கொணர்வதில் இந்திய அரசாங்கம் சார்பு ரீதியிலும் சிககலான வழியிலும் சம்பந்தப்பட்டதேயாகும்'' என்ருர்.

இந்திய இராணுவம் என்ன பாத்திரத்தினை வகிக்கப் போகின்றது என்பது சம்பந்தமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு சந்தேகம் நிலவியதில்லை; இதனை பெக் விளக்குகையில் ''அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இந்தியர்களின் பிரசன்னமும், இந்தியாவின் பூரண ஆதரவும் தமிழ் கட்சிகள் உடன்படிக்கையுடன் ஒத்துப் போகும் என்பதற்கு ஒருவித உத்தரவாதத்தினை வழங்குகின்றது.''

உடன்படிக்கையின் வெளிப்படுத்தப்பட்ட நடு நோக்கம் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை சிதறடிப்பதே. ஆதலால் ''அந்தக் கட்சிகள் உடன்படிக்கையுடன் ஒத்துப் போகும்'' என்ற இராஜதந்திர பரிபாசையின் அர்த்தம் நன்கு தெளிவானது: இது ஜயவர்தன, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக காந்தி யுத்தம் தாக்கல் செய்ததையே அன்றி வேறெதனையும் கருதவில்லை.

இது தொடர்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இரண்டு சாத்தியங்களை எதிர் பார்த்தனர். ஒன்று, விடுதலைப் போராளிகளை விரைவில் நிராயுதபாணியாக்க இந்தியர்களின் நெருக்குவாரம் போதுமானதாக விளங்கும்: கமிட்டிக்கு வழங்கிய எழுத்து வடிவிலான ஓர் அறிக்கையில் பெக் இந்த அம்சத்தைத் தெளிவுபடுத்துகின்ருர். ''ஏனைய தமிழர்களிடையே பலம் வாய்ந்த போராளிக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் தனது பூரண எதிர்ப்புக்களை மறு பரிசீலனை செய்வதாக தெரிகிறது. பிரதமர் காந்தி, விடுதலைப் புலிகள் இயக்கம் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிகிறது.''

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கு முற்றிலும் எதிரான 'சமரசத்தை' ஏற்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நெருக்கப்பட்டதாக நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

''திரு: பிரபாகரனின் நிலைப்பாட்டின்படி ஒருவர் அவரின் சொந்த வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கலாம் என நான் நினைக்கின்றேன். அதை அவர் தெளிவுபடுத்தி உள்ளனர். இந்தியா தொடர்ந்து செல்ல திட சங்கற்பம் கொண்டிருந்ததால் அவர் அங்ஙனம் செய்யும்படி தள்ளப்பட்டதாலேயே அவர் உடன்படிக்கைக்கு இணங்கினுர் அத்தோடு ஆவரும அவரைப் பின்பற்றுவோரும் இதைப் பின்பற்

★ 8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



## கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும்

# சோவியத் யூனியனில் நிகழ்வதென்ன?

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

### மார்ச் 23, 1986

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக வரலாற்றின் மாபெரும் நிகழ்வும் உலக பாட்டாளி வர்க்கத்தின் பெரும் வெற்றியுமான அக்டோபர் புரட்சியின் எழுபதாண்டு நிறைவை அண்மிக்கும் சோவியற் தொழிலாள வர்க்கத்திற்கு மரியாதை செலுத்துகின்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு சோவியத் நாட்டினையும். ஏகாதிபத்தியத்திற்கெதிராக அக்டோபர் புரட்சியின் பெறுபேறுகளையும் நிபந்தனையின்றி பாதுகாக்கின்றது: தற்சமயம் மிகைல் கொர்பச்சேவின் தலைமையிலான அதிகாரத்துவத்தை தூக்கியெறியும் அரசியல் புரட்சியினை முக்கிய அங்கமாக் கொண்ட உலக சோஷலிச புரட்சியினூடாக மட்டுமே இப் பாதுகாப்பு சாத்தியமாகும் என, அதே சமயம் அது கூறி வைக்கின்றது.

கொர்பச்சேவின் அண்மைக்கால 'கினாஸ்நோஸ்ட்' சீர்திருத்தத் திட்டம், முதலாளித்துவ பொதுசன அபிப்பிராயத்தினால் போற்றப்பட்டு, ட்ரொட்கிசத்தினை விட்டோடிய ஒவ்வொரு திரிபுவாத ஓடுகாலிகளினால் கொண்டாடப்பட்டாலும், இந்த வரலாற்று முன்னோக்கினை சிறிதளவும் மாற்றியமைக்காது.

கொர்பச்சேவ் பிரதிநிதித்துவம் செய்வது, சாரிசத்தை தூக்கியெறிந்து முதலாவது தொழிலாள அரசை அமைத்த சோவியத் தொழிலாள வர்க்கத்தையல்ல, அதிலும் மேலாக தொழிலாள வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை உறிஞ்சிப் பெற்ற அதிகாரத்துவ சாதியையே பிரதிநிதித்துவம் செய்கிறார். அவர் 1917 அக்டோபர் புரட்சிக்கு தலைமை தாங்கிய லெனின், ட்ரொட்ஸ்கியின் வாரிசு அல்ல மாறாக அதற்கு குழிதோண்டிய ஸ்டாலினின் வாரிசாவார். தனது முழு ஆயுள் பூராகவும் சேவையாற்றிய இந்த அதிகாரத்துவத்தின் உற்பத்தியே அவர். தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான குட்டி முதலாளித்துவ எதிர்ப்பை உள்ளடக்கிக் கொண்டு மக்களிடமிருந்து பிரிந்தவாறு அதிகாரத்துவத்திலிருந்து தோன்றியவர் ஆவர்.

கொர்பச்சேவின் தற்போதைய கொள்கைகள் முதலாளித்துவ பொதுசன தொடர்புச் சாதனங்களால் புகழப்பட்டதோடு, கிரெம்ளின் அதிகாரத்துவத்தின் தலைவரை தமது இவ்வாண்டின் உயர்மனிதராக தேர்ந்தெடுத்துள்ளது. நன்கு புகழ்பெற்ற கம்யூனிச விரோத சஞ்சிகையான, அமெரிக்க ''ரைம்'' சஞ்சிகையானது கொர்பச்சோவின் 'கவர்ச்சியான தாக்குதல்களை'' போற்றி இப்படிப் பிரகடனம் செய்கின்றது ''அவர் தனது மந்திரக்கோலை அசைத்து குளிர் யுத்த சோவியத் கேலிச் சித்திரத்தை இல்லாதொழிக்கிறார்''. இந்த முதலாளித்துவ தொடர்புச் சாதன கலவையின் வடிகாலாக செயற்பட்டு கொர்பச்சேவின் தேசிய கொள்கைகளை அதிகாரத்துவத்தின் சுய சீர்திருத்தத்திற்கான ஆற்றலாக மாறிய பலவகைப்பட்ட திரிபுவாத போக்குகளும், ஸ்டாலினிசம் பற்றி ட்ரொட்ஸ்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வை நிராகரிக்கின்றார்கள்.

நான்காம் அகிலமானது இந்த முதலாளித்துவ பொதுஜன அபிப்பிராயத்தின் பிரகடனங்களை முற்றாக நிராகரிப்பதுடன், மார்க்சிச விரோத திரிபுவாதிகளின் விதிமுறைக்கு நேர் எதிராக தனது சுய ஆய்வினை அபிவிருத்தி செய்கின்றது அது கொப்பச்சேவின் 'கவர்ச்சி'யிலிருந்தோ அல்லது நெருக்கடியுள் சிக்கியுள்ள அதிகாரத்துவ ஆட்சியைக் காக்கும் இலக்குடனான வேறு தேசிய திட்டங்களிலிருந்தோ ஆரம்பமாகவில்லை எமது ஆரம்பம் சர்வதேச பாட்டாளி வர்க்கமும், உலக சோசலிச புரட்சியுமாகும். இந்த சர்வதேச முனைநோக்கிலிருந்தும், சோவியத் அரசின் தோற்றத்தினதும், அபிவிருத்தியினதும், நிலைப்பாட்டிலிருந்தும், விளங்கிக் கொள்ள முடியும். சோவியத் அரசின் தோற்றத்தினதும் அதன் அபிவிருத்தியினதும் நிலைப்பாட்டிலிருந்தும், அதனைத் தொடர்ந்துவந்த அதிகாரத்துவத்தின் நாற்றமடுப்பிலிருந்துமே சோவியத் யூனியனையும், கொப்பச்சேவையும் விளங்கிக் கொள்ள முடியும்.

(2. உலகப் புரட்சியின் ஆரம்பமாக அக்டோபர் புரட்சி விளங்கியது: லெனின், ட்ரொட்ஸ்கி போல்ஷிவிக்கட்சி என்பவற்றின் தலைமையின் கீழ் ரூஷ்ய தொழிலாளர்கள் உலகத் தொழிலாள வர்க்கத்திற்கு, சோவியத்துக்களை (தொழிலாளர் சபைகள்) அடிப்படையாகக் கொண்ட தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளித்துவ அரசயந்திரத்தை தகர்த்து விடுவதினூடாக ஆட்சியை பெறுவது எப்படி என்பதை முதல் முதலாக எடுத்துக் காட்டினர். உற்பத்தி சக்திகளினதும், நிலங்களினதும் தேசிய மயமாக்குதல், வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்தை நிலை நாட்டுதல் என்பன இம் மனித வரலாற்றின் மாபெரும் சமூக மாற்றத்திற்கு வழிகோலின. உற்பத்தி சக்திகளில் தனியார் சொத்துடமையை அடிப்படையாக கொண்ட வங்குரோத்துற்ற, காலத்துக்கொவ்வாத முதலாளித்துவ அமைப்பினை தகர்த்து தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை ஏற்படுத்திய அக்டோபர் புரட்சி சோவியற் நாட்டின் பாரிய அபிவிருத்தியை ருசுப்படுத்தியது

அடக்கு முறை, அறியாமை, பின் தங்கிய நிலையிலிருந்து விடுபட்டு, சோவியத் மக்கள் அசாதாரண வெற்றிகள் பெற்றனர்: திட்டமிடப்பட்ட பொருளாதாரம், உலகின் மாபெரும் கைத்தொழில் வலிமையுள்ள சக்திகளில் ஒன்று, முன்னெருபோதுமில்லாத அளவில் விஞ்ஞான, கலை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி.

ஆயினும் இன்னமும் சோசலிசம் கட்டியெழுப்பப்படவில்லை சோவியத் நாடு முதலாளித்துவமோ, சோசலிசமோ அல்லாத இடைமருவு நிலையை கொண்டுள்ளது. சோசலிசத்துக்கான இடை மருவலானது ஓர் உலக சோஷலிச புரட்சியின் வெற்றியினால் மட்டுமே அடைய முடியும். இதற்கு பதிலாக அதிகாரத்துவத்தின் கீழான ஆட்சியில் சோவியத் தொழிலாள வர்க்கமானது அக்டோபர் புரட்சியின் பெறுபேறுகள் தூக்கி வீசப்படும் ஆபத்தையும், முதலாளித்துவம் மீள புனரமைக்கப்படும் ஆபத்தையும் எதிர் கொள்கின்றது:

(3) அக்டோபர் புரட்சியின் தலைவர்களுக்கேற்ப ரஷ்யாவில் சோவியற் ஆட்சி பெற்றமை, மூன்றாம் (கம்யூனிஸ்ட்) அகிலத்தை கட்டியெழுப்பி சர்வதேச ரீதியில் அதனை விரிவுபடுத்துவது என்பதிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒன்றாகும். ரஷ்யப் புரட்சியின் வரலாற்று முரண்பாடாக, உலக ஏகாதிபத்தியத்தின் அபிவிருத்தியானது முன்னேற்றமடைந்த ஏகாதிபத்திய நாடுகளான மேற்கைரோப்பிய வட அமெரிக்காவில் பாட்டாளி வர்க்கம் முதலில் ஆட்சியைப் பெறும் நிலைகளை சிருட்டிக்காது மிகவும் பின் தங்கிய பொருளாதாரத்தினை கொண்ட நாட்டில் ஏற்படுத்தியது. இந்தப் பின்தங்கிய தன்மை, முதலாவது ஏகாதிபத்திய போரினால் (1914-1918) ஏற்பட்ட சுமைகளுடன் சேர்ந்து தாக்குப் பிடிக்க முடியாத முதலாளி வர்க்கம், முதலாளித்துவ புரட்சியின் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமையின் கீழிருக்கையில் தொழிலாள வர்க்கம் ஆட்சியை பெறுவதற்கான சாத்தியப்பாட்டையும், அவசியத்தையும் ஏற்படுத்தியது.

ரஷ்யாவில், லெனின் கூறியவாறு ஏகாதிபத்திய தொடர்புகள் தனது பலவீனமான கிளையை அறுத்துக் கொண்டது. ஆனால் லெனினும், போல்ஷிவிக்குகளும் எப்போதும் வற்புறுத்துவதற்கு ஒப்ப, ரஷ்ய புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரே வழி சோஷலிசப் புரட்சியை முன்னேறிய நாடுகளிலும், முழு உலகத்திலும் விரிவுபடுத்துவதே. ஆனால் முதலாவது உலகப்போரின் முடிவின் பின் தொடர்ந்தெழுந்த புரட்சிகர எழுச்சி அலைகள் அக்டோபர் புரட்சியை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் விரிவுபடுத்தும் விளைவை ஏற்படுத்தவில்லை ஏனெனில் 1918ல் ஜேர்மனியில் தொடங்கி தொழிலாள வர்க்கம் மூக ஜனநாயகத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டது மீண்டும் ஆட்சி அதிகாரம் முதலாளித்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

லெனின் கீழிலிருந்த சோவியத் தலைமைத்துவமானது சோசலிசப் புரட்சியை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் விரிவுபடுத்துவதையும், சோசலிச கூட்டு முன்னெடுக்கினை

★ 4ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

# சோவியத் யூனியனில் நிகழ்வ...

யும் தனது உள்நாட்டு பொருளாதாரக் கொள்கையின் அடித்தளமாக கொண்டிருந்தது; பின் தங்கிய ரஷ்யாவின் எல்லைக்குள்ளே சுயதேவையை பூர்த்தியாக்கும் சோசலிச பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதன் சாத்தியத்தை பற்றி ஒரு போதுமே அது மனங்கொள்ளவில்லை.

உலகப்போரின் பின்னர் ஏற்பட்ட புரட்சிகரப் போராட்டங்களின் முதலாவது அலை கா... கொடுக்கப்பட்ட பின்னர், தந்திரோபாய பின்வாங்கல...க, வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்தையும், வங்கிகள், அடிப்படைக் கைத்தொழில்கள், நிலங்களை தேசியமாக்கலை பேணிக் கொள்ளும் அதே வேளையில், விவசாய பொருட்களுக்கான சந்தையை மீண்டும் அறிமுகப்படுத்துவதனூடாக சில வரையறுக்கப்பட்ட சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை—தானிய தேவையை பூர்த்தியாக்கும் ''யுத்த கம்யூனிச'' கொள்கைகளை மீள அமைத்தது

போல்ஷிவிக் தலைமைக்கு இத்தகைய சலுகைகள் உலகப் புரட்சிக்கான முழுமையான மூலோபாயத்துடன் நேரடியாக கட்டுண்டவை. 1922 கம்யூனிஸ்ட் அகிலத்தின் நான்காவது காங்கிரசில் ட்ரொட்ஸ்கி விளக்கியதற்கொப்ப ''புதிய பொருளாதாரக் கொள்கையானது குறிப்பிடப்பட்ட, காலம், இடம் பற்றிய நிலைமைகளுக்காக கணிப்பிடப்பட்டது. அது முதலாளித்துவ சுற்றுடலில் உள்ள தொழிலாளர்களின் ஒரு சூழ்ச்சியாகும்; அத்துடன் ஐரோப்பாவின் புரட்சிகர அபிவிருத்தியை முடிவாக கணிப்பிடுகின்றது. புதிய பொருளாதாரக் கொள்கை உண்மையில் அத்தகைய அபிவிருத்தியின் கட்டத்திற்கான தழுவல் ஆகும்,'' (லெனினின் பின் மூன்றும் அகிலம், ட்ரொட்ஸ்கி நியூயோர்க்-பப்ளிக்கேஷன்ஸ் பக்கம்32-33)

(5) தனது பொருளாதார கொள்கைகளை நியாயப்படுத்துவதற்காக கொர்பச்சேவ் வெகு தந்திரமாக அவற்றை லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கை"யுடன் அடையாளம் காண்பிக்க முயல்கிறார். 70 ஆண்டுகளுக்கு பிற்பட்டதான இந்த அதிகாரத்துவத்தின் கொள்கைகளை, விவசாயத்தையும் கைத்தொழில்களையும் நாசப்படுத்திய உள்நாட்டு யுத்தத்தின் பின் உடனடியாக சோவியத் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளுடன் ஒப்பிடுவது கொர்பச்சேவின் ஆட்சியின் அளவு கடந்த நெருக்கடியின் ஓர் அளவுகோலாகும்.

லெனின் கொள்கைகளும், கொர்பச்சோவின் கொள்கைகளும் முற்றாக எதிரெதிரானவையாகும். கம்யூனிஸ்ட் அகிலத்தை கட்டியெழுப்பி உலகளாவிய மட்டத்தில் அக்டோபர்புரட்சியை விரிவுபடுத்த போராடும் அதேவேளையில், சோவியத் நாட்டை கட்டுக்குள் வைத்திருக்கும் அடிப்படையினை லெனின் கொள்கைகள் கொண்டிருந்தன. கொர்பச்சேவின் கொள்கைகளோ, ஒரு நாட்டில் சோசலிசம் என்ற எதிர்ப் புரட்சிகர முன்னோக்கினடிப்படையிலமைந்ததுடன், உலகம்பூராகவும் உள்ள புரட்சிகர போராட்டங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் ஆழ்ந்த உறவு வைக்கும் அதிகாரத்துவத்துடன் நேரடியாக கண்டுண்டவையாகும்.

உலகப் புரட்சியின் காலதாமதம் தனது தவிர்க்க முடியாத அரசியல் வி... வினை சோவியத் நாட்டின் உள்ளே காட்டியுள்ளது. முதலாவது தொழிலாளர் அரசின் பின்தங்கிய பொருளாதா... ஏகாதிபத்திய எதிர்ப்பு சூழ்ந்து


**Subscribe to Tholilalar Pathai**

*Have it posted.*
*20 issues: DM 26,-*

*Write to:*
*Neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

Ecrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

*Subscription payable to account no. 211 85-431, Postgiroamt Essen (effected at any post office)*


கொண்ட நிலையை எதிர்கொண்டு தனிமைப் படுத்தப்பட்டது, பல்லாண்டு காலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் சக்தி அழிக்கப்பட்டதுடன், பின் தங்கிய விவசாயிகளை மக்கள் தொகையின் பெரும்பகுதியாக கொண்டிருந்த நிலைமையின் கீழ் அரசயந்திரத்தில் அதிகாரத்துவ குறைபாடுகள் தோற்றமெடுத்தன; பின் தங்கிய சோவியத் பொருளாதாரத்தின் முரண்பாடுகளின் நிலைப்பாட்டிலிருந்து அதிகாரத்துவத்தின் புறநிலையான தோற்றம் பற்றிய ட்ரொட்ஸ்கி பின்வருமாறு விபரிக்கிறார்:



வி ஐ லெனின்

''சோவியத் அதிகாரத்துவத்தின் சீரழிவில் பிரதிபலிப்பது நவீன சமுதாயத்தில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறும் பொது விதியல்ல. பதிலாக முதலாளித்துவ சூழலில் உள்ள பின் தங்கிய புரட்சிகர நாட்டில் விசேட, அசாதாரண, தற்காலிக திசை திருப்பு விதியாகும். நுகர்வோர் பொருளுக்கான கிராக்கியும் அவற்றை பெறுவதற்கான உலகளாவிய போராட்டமும் விநியோக நடவடிக்கைகளை தானாக வலுப்படுத்தும் பொலிஸ்காரனொருவனை தோற்றுவிக்கின்றது. வெளியிலிருந்து வரும் எதிர்ப்பு நெருக்குவாரங்கள் பொலிஸ்காரன் மீது நாட்டின் 'பாதுகாப்பாளன்' என்ற நிலையை வழங்கி தேசிய ரீதியில், அதிகாரமளித்து நாட்டை சூறையாட இரட்டிப்பாக இடமளிக்கிறது

''அதிகாரத்துவத்தின் பலத்த சக்திக்கான இரு நிலைமைகள் — நாட்டின் பின் தங்கிய தன்மையும், ஏகாதிபத்திய சூழல் என்பன எப்படியோ இவை ஒரு தற்காலிக இடைமருவுப் பண்பினை கொண்டதுடன், உலகப் புரட்சியின் வெற்றியினால் மறைந்தொழியும். (ட்ரொட்ஸ்கி-மார்க்கிசம் காக்க நியூயார்க் பப்ளிகேஷன் பக்கம் 8)

கட்சியிலும் அரசிலும் வளர்ந்துவரும் அதிகாரத்துவத்திற்கு எதிரான முதலாவது போராட்டம் லெனினால், ட்ரொட்ஸ்கியுடன் இணைந்தவாறு நடாத்தப்பட்டது. லெனின் மறைவின் பின்னர் இடதுசாரி எதிர்ப்பு அணியினால் இப்போராட்டம் சோவியத் தொழிலாள வர்க்கத்தை, கைத்தொழில் மயமாக்கம், பொருளாதாரத் திட்டமிடல் என்பவற்றுக்கூடாக பலப்படுத்தும் நோக்குடனான அரங்கொன்றுக்கான போராட்டமாக கட்சிக்குள் அதிகாரத்துவத்தை துடைத்துக் கட்டுவதற்காக தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆளுமையிலிருந்த ஸ்டாலின், சினோவியவ் கமனேவ் என்பவர்களின் வழி நடத்தலின் கீழ் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாள வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்திற்கு தயாரிப்பதை நிராகரித்ததானது 1923ல் ஜேர்மன் புரட்சியை தோல்விக்கு இட்டுச் சென்றதுடன், மேலும் தொழிலாள வர்க்கத்தை பலவீனப்படுத்தி, குட்டி முதலாளித்துவ சக்திகளை குறிப்பாக அரசயந்திரத்தில் வலுப்படுத்தியது. தமது சொந்த வசதிகளை விரிவுபடுத்துவதையே முக்கிய கொள்கையாக கொண்டிருந்த இந்த சமூக தட்டினரின் அழுத்தத்தின் பிரதிபலிப்பினாலும், ஐரோப்பா

வில் புரட்சி காலதாமதமா...
அடைந்த ஏமாற்றத்தை...
புகாரினும் 1924 கார்கால...
சோஷலிசம்'' என்ற ...
வெளிவந்தனர்.

மார்க்கிசத்தின் அடி...
கொள்கையானது, ட்ரொ...
பாட்டுக்கு நேரடியான தா...
தேச ரீதியிலான தொழில...
தின் வேலைத் திட்டத்தை க...
காட்டல் முன்னோக்காக ...
கொர்பச்சேவின் அடிப்ப...
றது.

தனது நிரந்தரப் புர...
எடுகோள்கள் இரண்டை...
விபரித்தார். ''முதலாவத...
பின் தங்கிய நிலையில் கா...
முன்னேறிய நாடுகளில் உ...
சகுள் ஆட்சி கைமாற...
ஆட்சியை கைப்பற்றக்கூடி...
இரண்டாவதாக முதலா...
சூழப்பட்ட பின் தங்கிய நா...
சர்வாதிகாரமானது, உலக...
முரண்பாடுகளிலிருந்து வ...
லெனினின் பின் மூன்றும் ...
பக்கம் 31).

அக்டோபர் புரட்சி...
களை தாக்குகையில் ஸ்டா...
கள் தொழிலாள வர்க்கத்தி...
மன்கள்' அரசயந்திரத்தின்...
சாரி அழுத்தங்களை தழுவிச்...

(7) சர்வதேச ரீதி ல், ...
டத்திற்கு பதிலீடாக '...
என்ற தேசிய வாதத்தை ...
தர்ப்பவாதத்தை வளர்ந்து...
வாதம் நேரடியாக சோவி...
லாள வர்க்க நலனுக்கும் எ...
அபிவிருத்திக்காக உழைத்த...

ட்ரொட்ஸ்கி விபரித்...
உதாரணமாக நிதி மூலதன...
ளாதாரம், உலக அரசியல் ...
யூனிஸ்ட் கட்சியுமே தனது...
நிலைமைகள் போக்குகளை அ...
திட்டங்களை நிறுவ முடிய...
அதிகாரத்தை வைத்திருக்கு...
பொருந்தும். 1914 ஆகஸ்ட...
டத்திற்கான சாவுமணி அடி...

''பாட்டாளி வர்க்க...
துவத்தின் உயர் கட்டத்தி...
இன்றைய சகாப்தத்தின் ...
அனைத்துலக வேலைத் திட்ட...
கக் கொள்ள முடியும். ஒரு...
திட்டமானது, எந்த விதத்...
வின் ஒட்டுமொத்தமான கூ...
றின் பொதுப் பண்புகளின் ...
துலக வேலைத் திட்டமானது...
டலக அரசியல் அமைப்பின...
ளையும் ஆய்வதில் இருந்து ...
வேண்டும். அவை அவற்றி...
டன் ஒரு முழுமையாக கொ...
தனியான பகுதிகளுக்கு இ...
மிக சார்பு ரீதியில் அணுக...
தைக் காட்டிலும் இன்றை...
பாட்டாளி வர்க்கத்தின் தே...
உலக அமைவுப் போக்கில் ...
முடியுமேயன்றி அதற்கு எ...
கம்யூனிச அனைத்துலக வாத...
சொந்த தேசிய சோசலிச...
படையானதும் ஆரம்பமுழு...
(அதே நூல் – பக்கம் 3 4)

சோவியத் நாட்டின் மு...
திட்டத்தினால் தீர்த்து ...
வத்தின் முன்னோக்கானது, ...
கத்தின் சுயாதீனமான பு...
ரித்து. ஏழ்மை சக்திகளை தோ...

www.padippakam.com
படிப்பகம்

# ன்ன?

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

சாவியத் தொழிலாளர்
படுத்தி ஸ்டாலினும்,
''தனி ஒரு நாட்டில்
த'' முன் வைத்தபடி

ப திரிபுபடுத்தும் இந்தக்
ந்தரப் புரட்சிக் கோட்
அமைந்தது. இது சர்வ
புரட்சிகர போராட்டத்
திகாரத்துவத்தின் நெறி
ட்டது. இன்று இது
திட்டமாக விளங்குகின்

ட்பாட்டின் அடிப்படை
ட்ஸ்கி பின்வருமாறு
யா வரலாற்று ரீதியில்
ாலும், புர சியான
லாள வர்க்கத்தின் கை
த் தொழிலாள வர்க்கம்
யை உருவாக்க முடியும்,
திரிகளது உலகத்தால்
தாழிலாள வர்க்கத்தின்
யின் ஊடாகவே இந்த
யும். (ட்ரொட்ஸ்கி,
நியூயார்க் புப்ளிகேஷன்

படுத்திய இக் கொள்கை
ாரின் போன்ற தலைவர்
ாக குலாக்குகள், 'நெப்
த்துவ வாதிகளின் வலது
னர்.

ட்சிக்கான வேலைத்திட்
நாட்டில் சோசலிசம்'
டயாகக் கொண்ட சந்
வியது. இச் சந்தர்ப்ப
க்கும், உலகத் தொழி
க முதலாளித்துவத்தின்

''எமது சகாப்தத்தில்
திக்கத்தில் உலக பொரு
லைமையில் எந்த ஒரு கம்
நாட்டின் அபிவிருத்தி
யாகக் கொண்ட வேலைத்
மது எல்லைக்குள் ஆட்சி
யத் யூனியனுக்கும் இது
தி தேசிய வேலைத் திட்
டது.

ட்சிக் கட்சி, முதலாளித்
ரிவினதும சகாப்தமான
தொடர்புபட்ட ஒரு
மட்டுமே அடிப்படையா
லக கம்யூனிஸ்ட் தேலைத்
தேசிய வேலைத் திட்டங்க
ாகையோ அல்லது அவற்
கயோ ஆகாது. அனைத்
பொருளாதாரத்தினதும்
மைகளையும் போக்குக்க
ாக முன்னேறிச் செல்ல
ர்புகள், முரண்பாடுகளு
தாவது அவற்றின் தனி
ன பரஸ்பரம், குரோதம்
ண்டும் கடந்த காலத்
யத்தில் பெருமளவுக்கு
மவுப் போக்கானது ஒரு
மட்டுமே பெருக்கெடுக்க
க அன்று. இங்குதான்
சகல வகைப்ருக்களைச்
இடையேயான அடிப்
றுபாடுகள் உள்ளன.''

ரடுகள் ஓர் தேசிய வேலைத்
லாமென்ற அதிகாரத்து
தேச தொழிலாள வர்க்
ப் பாத்திரத்தை நிராக
ரும்புவதற்கு இட்டுச்சென்

றது. சோவியற் நாட்டை பேணும் ஒரே வழியாக உலகப் புரட்சியை நோக்கி செல்வதற்கு பதிலாக அது ''ஏகாதிபத்திய முதலாளித்துவத்தை நடு நிலைமைப்படுத்தல்'' என்னும் நோக்குடனான சந்தர்ப்பவாத கூட்டுகளுக்கு இட்டுச் சென்றன.

பிரித்தானியாவில் ரி.யூ.சி. தொழிற் சங்கவாத தலைவர்களுடன் இணைந்து அமைக்கப்பட்ட அங்லோ-ரஷ்யன் குழுவானது பிரித்தானிய புரட்சியின் நலனுக்கான தந்திரோபாய



மிகைல் கொர்பச்சேவ்

கூட்டாகவன்றி, சோவியற் நாட்டின் பாதுகாப்புக்காகவே அமைக்கப்பட்டதாகவே ஸ்டாலின் கண்டார். ரி.யூ சி 1926ல் பொது வேலை நிறுத்தத்தை காட்டிக் கொடுத்த பின்னரும் கூட அதிலிருந்தும் விடுபட ஸ்டாலின் மறுத்தார்.

சீனாவில், மென்ஷ்விக்குகளின் இரண்டு கட்டப் புரட்சிக் கொள்கையை ஸ்டாலின் புத்துயிருட்டியபடி, ஜனநாயகப் புரட்சி பூர்த்தியானதன் பின்னரே தொழிலாள வர்க்கம் ஆட்சிக்காக போராட முடியும் என்ற அடிப்படையில் முதலாளித்துவ கொமின்டாங்குக்கு, தன்னை கீழ்படுத்திக்கொள்ள கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஸ்டாலின் அறிவுறுத்தினான். பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சியின் பணிகள், தொழிலாள வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவதால் மட்டுமே பூர்த்தியாகும் என்ற ட்ரொட்ஸ்கியின் கோட்பாடு, அக்டோபர் புரட்சிமூலம் நிரூபிக்கப்பட்டது.

ஸ்டாலினின் எதிர்ப் புரட்சிகர இருகட்ட முன்னோக்கு என்ற தத்துவத்தின் விளைவாக 1927ல் இரண்டாவது சீனப் புரட்சி தோல்வி கண்டதுடன, ட்ரொட்ஸ்கி இடதுசாரி எதிர்கட்சியினால் முன் வைக்கப்பட்ட எச்சரிக்கையை உறுதிப்படுத்தியது. ஆனால் இந்த தொழிலாள வர்க்கத்தின் தோல்வியானது அதிகாரத்துவத்தின் பிடியை வலுப்படுத்தியதுடன் அது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து (சீ.பி.எஸ் யூ.) ட்ரொட்ஸ்கியை வெளியேற்றக் கூடிய நிலமையையும் உண்டு பண்ணியது.

சோவியத் நாட்டில் ட்ரொட்ஸ்கியினாலும், இடதுசாரி எதிர் கட்சியினாலும் கைத்தொழில் மயமாக்கல், திட்டமிடல் என்பவற்றுக்காக நடத்தப்பட்ட போராட்டமானது, ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட கோர விளைவுகளினால் நிரூபிக்கப்பட்டது. 1923லிருந்து 1927 வரை குலாக்குகளில் முற்றாக தங்கியிருந்தவாறு, கைத்தொழில் மயமாக்கலுக்கு எதிரான அதிகாரத்துவத்தின் வேலைத் திட்டமான ''பொருளாதார சந்தர்ப்பவாதம்'', இதுவரை கிராமப் புறங்களுக்கு கைத்தொழில் பொருட்கள் செல்லுவதை தடுத்ததுடன், 1928ல் தானிய வேலை நிறுத்தத்தையும் ஏற்படுத்தியது பீதியுற்ற அதிகாரத்துவம் ''பொருளாதார அதி தீவிரவாதத்திற்கு'' 100% கூட்டு பண்ணைகள் குலாக்குகள் வர்க்கத்தை ஒழித்தல், கைத்தொழில்மயமாக்கலைத் துண்டித்தல் ஆகியவைவற்றிற்கு திடீரெனத் திரும்பியது.

குலாக்குகளுக்கு கீழ்படியும் தனது சந்தர்ப்பவாத நடமுறையினால் மீண்டும் முதலாளித்துவம் புத்துயிராக்கப்படும் ஆபத்தினால் இந்த ''இடது'' திருப்பத்தை கடைப்பிடிப்பது அவசியமானது. இடதுசாரி எதிர்ப்பு அணியின் பொருளாதார திட்டங்களின் கணிசமான அளவுகளை ஸ்டாலின் விகாரப்படுத்திய விதத்தில் எடுத்துக் கொண்டான். இத் திருப்பத்திற்கான அடிப்படையில் ஸ்டாலினிடம் சரணடைந்த இடதுசாரி எதிர்ப்பு அணியினை சேர்ந்தோருக்கு எதிராக ட்ரொட்ஸ்கி இந்த புதிய கொள்கைகள் இன்னமும் 'தனியொரு நாட்டினுள் சோசலிசம்' எதிர்ப் புரட்சிகர வேலைத்திட்டத்தினுள் கடைப்பிடிக்கப்படுவதை சுட்டிக் காட்டினார்:

இந்த பொருளாதார சுழிவுநெழிவுகள் சோவியத் நாட்டை சிவில் யுத்த விளம்பிற்கு கொண்டுவந்ததுடன் 1934ல் ஜேர்மனிய தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு வித்திட்ட ''மூன்றாவது காலகட்ட'' சர்வதேச அதி தீவிரவாத அழிவுக் கொள்கைக்கு சமானமாக வெளிப்பட்டது.

கம்யூனிச அகிலத்தினாலும், ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையினால் நேரடியாக தயாரிக்கப்பட்ட 'சமூக பாசிசம்' என்ற கிறிமினல் முன்னோக்கானது சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றில் பாபெரும் தோல்வியை ஏற்படுத்தியது. சமூக ஜனநாயகவாதிகளுக்கும், நாசிகளுக்கும் இடையே எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்ற அடிப்படையில், தொழிலாள வர்க்கத்தின் பரந்த அமைப்புகளிடையே ஐக்கிய முன்னணியை அமைப்பதை நிராகரித்த ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கையினால், எந்தவொரு போராட்டமுமின்றி ஹிட்லர் ஆட்சியேற வழிகோலினர்.

1933 ஏப்ரலில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிறைவேற்றுகுழு இக் கொள்கையை பேணியமையும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் எந்தவொரு பிரிவினதும் தலைமையும் இந்தப் போக்கினை எதிர்க்கத் தவறியமையும் மூன்றாம் அகிலம் எதிர்ப் புரட்சி முகாமினுள் திட்டவட்டமாக சென்றதை சுட்டிக் காட்டியது. ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தை அமைக்கும்படி அழைப்பு விடுத்தார்.

(8) 'தனி ஒரு நாட்டில் சோஷலிசம்' என்பது அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தினை அதிகாரத்துவத்தின் இராஜ தந்திரத்திற்கு அடிபணியச் செய்யும் ஒரு நனவான எதிர்ப் புரட்சி கொள்கையாகிற்று. இது ஸ்டாலினிசத்தின் மக்கள் முன்னணி கொள்கை மூலம் தன்னை வெளிப்படுத்திக் காட்டிற்று. இதன் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சி உலக முதலாளி வர்க்கத்தின் 'ஜனநாயக' பகுதியுடனான கூட்டுக்களுக்கு சாதகமாக அடியோடு நிராகரிக்கப்பட்டது. மக்கள் முன்னணியானது வரலாற்றில் கம்யூனிஸ்டுகளின் மாபெரும் படுகொலைகளுடன் கைகோர்த்தபடி சென்றது.

உலக முதலாளி வர்க்கத்துக்கு தனது நேர்மையினை நிரூபிக்கும் பொருட்டு ஸ்டாலின் தனது அவமானமிக்க மொஸ்கோ பொய் வழக்குகளை அரங்கேற்றினான். இதில் போல்ஷிவிக் கட்சியின் முழுத் தலைமையும் அடியோடு 'பாசிஷ்டுகளாக' பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டது. இலட்சோப இலட்சம் ஏனைய கம்யூனிஸ்டுகளும், அக்டோபர் புரட்சி, உள்நாட்டு யுத்தத்தின் வீரர்களும், வெளிநாடுகளில் குறிப்பாக ஸ்பெயினில் புரட்சிகர போராளிகளும் ஸ்டாலினிச இரகசியப் பொலிசான ஜீ.பீ.யூ. வினால் முறைமுறையாக அழித்தொழிக்கப்பட்டனர். லியோன் ட்ரொட்ஸ்கிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை, 1940ல் மெக்சிக்கோவில் ஸ்டாலினிச கொலையாளியால் அமுல் செய்யப்பட்டது. எனினும் அது அவர் நான்காம் அகிலத்தை நிறுவி முடிப்பதற்கு முன்னர் அன்று

கொர்பச்சேவும் இன்றைய அதிகாரத்துவமும் அவர்களின் இன்றைய 'ஜனநாயகம்' சீர்திருத்தங்கள் பற்றிய பேச்சுக்களுக்கு இடையேயும் சோவியற். அனைத்துலக தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான இந்த வரலாற்று குற்றங்களில் இருந்தே தமது அதிகாரங்களையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

அக்டோபர் புரட்சியின் தலைமையை ஒழித்துக் கட்டுவதன் மூலமே இந்த அதிகாரத்துவம் ஒரு வர்க்கமன்றி ஒரு சலுகைமிக்க சாதி என்ற அந்தஸ்தை பிடித்துக் கொண்டது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது ஒரு உருக்குலைந்த நிலையில் தொடர்ந்திருந்து வந்தது. அதிகாரத்துவம் தொழிலாளர் வர்க்கத்தை பூரணமாக அரசியல் ரீதியில் பறிமுதலாக்கி வந்தது.

தோன்றியதோர் ட்ரொட்ஸ்கியினால் சோவியற் போனபாட்டிசம என வருணிக்கப்பட்ட ஒரு ஆட்சியாகும் இது முரண்பாடான வர்க்க சக்திகளுக்கிடையே தன்னை சமநிலைப்படுத்தி வந்தது. குறிப்பாக தேசிய ரீதியில் தொழிலாள வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும், அனைத்துலக ரீதியல் ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளர் அரசுக்கும் இடையே சமநிலைபடுத்தி வந்தது.

'யுத்தத்துக்கும் பாசிசத்துக்கும் எதிரான' ஸ்டாலினிச மக்கள் முன்னணி உண்மையில் இவை இரண்டுக்குமே வழி வகுத்தது. ஸ்பெயினில் பிராங்கோவின் பாசிசத்தின் வெற்றியானது நேரடியாக ஸ்டாலினஸ்டுகளால் தயார் செய்யப்பட்டது. குடியரசு முதலாளித்துவ அரசுடன் மக்கள் முன்னணியைப் பராமரிக்கும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்குவதில் இவர்கள் பங்கு கொண்டனர். பிரான்சில் முதலாளித்துவ கட்சிகளு

★ 6ம் பக்கம் பார்க்க

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனில் . . .

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

டன் ஒரு மக்கள் முன்னணி அமைக்கும் நலனின் பேரில் ஸ்டாலினிஸ்டுகள் தொழிலாள வர்க்க இயக்கத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்தனர். இது பின்னர் ஹிட்லரின் இராணுவத்தினை பாரிசுக்குள் வரவேற்றது. அமெரிக்காவில் இவர்கள் பரந்த கைத்தொழில் தொழிற்சங்க இயக்கத்தினை ஜனநாயக முதலாளித்துவவாதி ருஷ்வெல்டுக்கு அடிமைப்படுத்தினர். இந்தியாவிலும், காலனித்துவ உலகு பூராவும் இவர்கள் 'ஜனநாயக' ஏகாதிபத்திய சக்திகளுடன் நெருங்கி உறவாடும் பொருட்டு தேசிய விடுதலைப் போராட்டங்களை காட்டிக் கொடுத்தனர்.

ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கத்தின் போராட்ட சக்தியை சிதறடித்தும் காலனித்துவ உலகில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை சீர்குலைத்தும் வந்ததன் மூலம் இறுதியில் கிரேம்ளின் ஸ்டாலின்–ஹிட்லர் ஒப்பந்தம் ஊடாக நாசிசத்துடன் ஒரு 'மக்கள் முன்னணி'க்கு சென்றது.

இந்த ஒப்பந்தம் ஸ்டாலினுடன் சேர்ந்து செஞ்சேனையின் படைத் தளபதிகள் (ஜெனரல்கள்) அனைவரையும் படுகொலை செய்ததன் மூலம் செஞ்சேனையை சிரச்சேதம் செய்தது. இதன் மூலம் 1941ல் நாஷி ஆக்கிரமிப்புக்கு வழி பிறந்தது. இது சோவியத் அரசின் அழிவின் பிறப்புக்கு கொணர்ந்ததோடு 200 இலட்சம் தொழிலாளர், விவசாயிகளின் உயிர்களையும் பலிகொண்டது.

தேசிய மயமாக்கப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரமும் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் வீரியமும் இதனுடன் இணைந்த வண்ணம் பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தில் ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தின் போராட்ட புத்துயிர்ப்புமே தொழிலாளர் அரசு ஸ்டாலினின் கொள்கைகளால் தூக்கி வீசப்படுவதை தடை செய்தது.

(9) இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரும் 1943ல் கம்யூனிஸ்ட் அகிலம் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் சோவியத் அதிகாரத்துவம் தனது தனி ஒரு நாட்டில் சோசலிசம் என்ற எதிர்ப்புரட்சி கொள்கையை கடைப்பிடித்தது. ஏகாதிபத்தியவாதிகளுடன் டெஹ்ரான், யால்டா, போஸ்டாம் ஆகிய இடங்களில் கைச்சாத்தான உடன்படிக்கைகளில் ஸ்டாலின் தொழிலாள வர்க்கத்தை நிராயுதபாணியாக்கி முதலாளித்துவத்தை கிரீசிலும், மேற்கு ஐரோப்பாவிலும் மீண்டும் ஸ்தாபிதம் செய்ய ஒத்துழைத்தான். இதற்குப் பதிலுபகாரமாக ஏகாதிபத்தியவாதிகள் கிழக்கு ஐரோப்பிய அரசுகளில் சோவியத் அதிகாரத்துவத்தின் மேலாதிக்கத்தை அங்கீகரித்தனர்.

கிரேம்ளினின் இந்த அனைத்துலக ஒத்துழைப்பு கொள்கையானது ஸ்டாலினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் முழுமனே புரட்சியை நிராகரிப்பதுடன் சேர்ந்து கொண்டது. பிரான்சில் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாள வர்க்கத்தை நிராயுதபாணியாக்கியதன் பின்னர் டீகோலின் அரசாங்கத்தில் சேர்ந்ததோடு இந்தோசீனத்தில் பிரான்சிய ஏகாதிபத்திய தலையீட்டை ஆதரித்தது.

கிழக்கு ஐரோப்பாவில் 1948 வரையும் தேசிய முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசும் வேலையில் அதிகாரத்துவம் ஈடுபடவில்லை; யூகோசலவாக்கியாவில் மன்னன் மைக்கேலை தூக்கி வீசுவதை கிரேம்ளின் உண்மையில் எதிர்த்தது. இந்த உருக்குலைந்த அரசுகள் அதிகாரத்துவத்தின் ஆட்சி நின்று பிடிப்பதைக் காட்டிலும் அதன் முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்தன.

உலக யுத்தமானது ஒரு புதிய புரட்சிகர நெருக்கடியினுல் தொடரப்படும் என்ற ட்ரொட்ஸ்கியின் எடுகோளானது, அதிகாரத்துவத்துக்கு தொழிலாள வர்க்கத்திடம் இருந்து கிடைத்த சவால் மூலம் ஒரு முரண்பட்ட விதத்தில் ருசுவாயிற்று. 1953ல் ஸ்டாலினின் மரணத்தைத் தொடர்ந்து அதிகாரத்துவம் தனது பழைய விதி முறைகள் மூலம் தொழிலாள வர்க்கத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது போனதோடு வரையறுக்கப்பட்ட சலுகைகளை வழங்கவும் நெருக்கப்பட்டது. ஆனுல் இந்த சலுகைகள், அதிகாரத்துவத்தின் ஆட்சியை தொழிலாள வர்க்க இயக்கம் அச்சுறுத்தியதும் அவற்றின் எல்லையை எட்டியதோடு அவற்றிக்கு கோரமான ஒடுக்கு முறைகள் மூலம் பதிலளித்தது.

1953ல் கிழக்கு ஜேர்மன் கிளர்ச்சியும் 1956ல் ஹங்கேரியின் புரட்சியும் 1968ல் செக்கோசலவாக்கியா மீதான ருஷ்யா ஆக்கிரமிப்பும் 1956, 1970லும் மீண்டும் 1976ல் போலந்து கிளர்ச்சிகளும் அரசியல் புரட்சிக்கான அவசியத்தினைப் பற்றிய ட்ரொட்ஸ்கியின் முன் நோக்கினை பலம்வாய்ந்த விதத்தில் நிரூபித்தன.

தொழிலாள வர்க்கத்தின் இந்த எழுச்சிகள் 1953ல் ஸ்டாலினின் மரணத்தில் இருந்து அதிகாரத்துவத்தினுள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் நெருக்கடியின் புறநிலையான அடிப்படையை காட்டுகின்றன. 1956ல் கட்சியின் 20வது காங்கிரசில் நிகழ்த்திய தனது 'இரகசிய பேச்சில்' குருஷேவ் ஸ்டாலின் சகாப்தத்தின் குற்றங்களை அரைகுறையாக வெளியிட்டார். இது எந்த விதத்திலும் ஸ்டாலினிசத்தில் இருந்து விடுபட்டதைக் குறிக்கவில்லை. ஒரு சில மாதங்களுள் 20,000 தொழிலாளர்கள் ஹங்கேரிய புரட்சி இரத்தம் சிந்தும் ஒடுக்கு முறையில் நசுக்கப்பட்டதன் மூலம் கொல்லப்பட்டதால் இது ருசுவாயிற்று. இந்த இரத்தக் களரியின்போது ஸ்டாலினிச இரகசியப் பொலிசாரின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தியவர் இன்றைய சோவியத் தலைவர் கொர்பச்சேவ்ன் குருவான யூரி அந்தரபோவன்றி வேறுயாருமல்ல.

1956ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அதிகாரத்துவத்தின் இன்றைய மாபெரும் நெருக்கடியின் வேர்கள், போலந்தின் சொலிடாரிட்டி சுதந்திர தொழிற்சங்க இயக்கத்தின் எழுச்சியுள் உள்ளன. போலந்து தொழிலாளர்களின் போராட்டம் முதலில் கிரக்கை ஆட்சி கைழ்த்தது; அடுத்து கனியா ஆட்சியை கவிழ்த்தது.

போலந்தின் பலத்த வேலை நிறுத்தங்கள், தொழிற்சாலைக்குள் உள்ளமர்வு போராட்டங்கள், தொழிலாளர் ஊர்வலங்கள் என்பன கிரெம்ளின் அதிகாரத்துவத்தின் இதயத்தை பீதியுறச் செய்தன. பொருளாதார ஸ்தம்பிதமும், சிக்கொண்ட ஊழல்களும், சோவியத் நாட்டின் தொழிலாள வர்க்கத்தின் அதிருப்திக்கு ஆளாகும் என்பதை புரிந்து கொண்ட கே.ஜீ.பியின் அந்திரபோவ் போன்றவர்கள் இது கிரெம்ளின் அதிகாரத்துவத்துக்கும் பெரும் நேரடிப் புரட்சிகர சவாலுக்கு இட்டுச் செல்லும்மென்றும் புரிந்து கொண்டனர்.

போலந்து சம்பவங்களால் மிகவும் திலக்கமோக்கப்பட்ட அரசியல் புரட்சிக்கான அச்சுறுத்தலிற்கு அதிகாரத்துவம் வழங்கிய எதிர்வினைவையே கொர்பச்சேவின் சீர் திருத்தங்கள் பிரதிபலிக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் உலகப் பொருளாதார நெருக்கடியின் வளர்ச்சியின் தாக்கத்தினுல் சோவியத் நாட்டிற்குள் ஏற்படும் சமூக, பொருளாதார முரண்பாடுகளில் இருந்து தமது ஆட்சியைப் பேணிக்கொள்ள ஸ்டாலினிச அதிகாரத்துவம் செய்த முயற்சியே இவையாகும்:

உலக ஸ்டாலினிசத்தின் ஒவ்வொரு பிரிவும் மக்களின் எழுச்சிகள், பொருளாதாரக் கலகங்களை எதிர்கொள்ளும் போது கொர்பச்சேவின் நெருக்கடி உருவாகியது. பெய்ஜிங்கிலிருந்து, பெல்கிரேட் வரையும் நடந்த ஒவ்வொரு சம்பவங்களின்போதும் முதலாளித்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதை நோக்கி வெளிப்படையாக திரும்புவதே ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் பதிலீடாக விளங்கியது.

போலந்தின் சொலிடாரிட்டியை அடக்கி ஐந்தாண்டுகளுக்கு மேல் கடந்தபின், வெளிநாட்டு வங்கிகளிடம் நாடு வாங்கிய கடனை 29 3 மில்லியன் டாலர்கள் வட்டிக் கொடுப்பனவுகளை எதிர்கொள்ளும் நோக்குடனுன புதிய கொள்கைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைகளால், ஜெருசெல்ஸ்கியின் ஆட்சியானது தொழிலாள வர்க்கத்திடமிருந்து தொடர்ந்த எதிர்ப்பை எதிர்கொண்டது. அதிகாரத்துவத்தின் பொருளாதாரத் திட்டங்கள் யாவும் சர்வதேச நாணய நிதியத்தின் பூர்வாங்க அனுமதிபெற சமர்ப்பிக்கப்பட்டதால், இவ் வட்டிக்காக போலந்தின் ஏற்றுமதி வருவாயில் 25 சதவீதம் முற்றாக செலவழிந்தது.

யூகோசலவக்கியாவின் அரச சொத்துடமைக்கான அடிப்படைகள் ஆழமாக மற்றிப்போனதால் பணவீக்கம் 100 சதவீதத்தை அடைந்து வேலையின்மை ஒரு மில்லியனுக உயர்ந்தது. கொபச்சேவினுல் முன் வைக்கப்பட்டவற்றை ஒத்திருந்த, பொருளாதார 'சீர் திருத்தங்களை' அதிகாரத்துவம் அறிமுகப்படுத்த முயன்றபோது, மாபெரும் வேலை நிறுத்த அலைகளை கட்டவிழ்த்தன.

சீனவில், தொழிலாளர் மாணவர்களது பாரிய ஊர்வலங்களுக்கு மத்தியிலும் பீகிங் அதிகாரத்துவமானது ஏகாதிபத்திய முதலீட்டுக்காக (கதவு திறக்கும்) ஓர் கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்தது. அதேவேளை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியை மீளக் கட்டியெழுப்பிய பின் ஹொங் கொங்கில் முதலாளித்துவ சொத்துடமை உறவுகளை பேணிக் கொண்டிருந்தது.

(12) இந்த பொதுப் பண்பான போக்கினை முற்றாக ஒத்ததாகவே கொபச்சேவினுல் பிரேரிக்கப்பட்ட மாற்றங்கள் விளங்கியதுடன், உலக ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் புரட்சிகர ஏஜன்சி ஒன்றுன ஸ்டாலினிசத்தின் பண்பினையும் காட்டியது. தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமை உறவுகள், வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகம், தொழிலாளர் அரசு ஒன்றின் உருவாக்கம் என்ற அக்டோபர் புரட்சியின் பேறுபேறுகளை மேலும் கீழ்ப்படுத்துவதையே இந்த 'சீர்திருத்தங்கள்' மையமாக கொண்டன.

(தொடரும்)

## "போர்த் இன்டர்நஷனல்" சஞ்சிகையை . . .

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விசுக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் 'போர்த் இன்டர்நஷனல் சஞ்சிகையை தடைசெய்யும் தங்கள் நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்கின்றேன்; இந்த உத்தரவை இரத்துச் செய்து சஞ்சிகையை உடனடியாக கையளிக்கும்படி நான் கோருகின்றேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சஞ்சிகையின் 1988 ஜனவரி–மார்ச் இதழ்கள் இராஜாங்க அமைச்சரின் உத்தரவின் பேரில் பறிமுதல் செய்யப்பட்டதை கண்டித்தும், அதனை கையளிக்கும்படியும் கோரி லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரான பேர்னுட் சொய்சா அமைச்சுக்கு ஓர் ஆட்சேபனை கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதம் கூறியதாவது "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு அதன் அனைத்துலக திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 'போர்த் இன்டர்நஷனல்' சஞ்சிகையை விடுவிக்க தங்கள் அமைச்சு மறுத்துள்ளது. இந்த அரசியல் இயக்கத்துக்கும் எமது கட்சிக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பினும், இந்தச் சஞ்சிகையை விடுவிக்காததன் மூலம் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நாம் கருதுகின்றோம். ஆதலால் இச் சஞ்சிகையை விடுவிக்கும்படி தங்கள் அமைச்சை வேண்டுகின்றோம்"

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கம் இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தத் தடை உத்தரவினுல் "இலங்கைத் தொழிலாள வர்க்க இயக்கத்தினதும் அனைத்துலக தொழிலாள வர்க்க இயக்கத்தினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் முக்கிய அடிப்படை உரிமை தாக்குதலுக்குள்ளாகி உள்ளது. மத்திய வங்கி ஊழியர் சங்கம் அதற்கு பெரும் எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு அந்தச் சஞ்சிகையை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கும் படியும் கோருகின்றது".

இலங்கைத் தொழிலாள வர்க்கத்துக்கும் அனைத்துலக தொழிலாள வர்க்கத்துக்கும் இடையேயான தொடர்பினை துண்டிக்கும் இந் நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிட்ட அந்த அறிக்கை "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1968ல் இருந்து நான்காம் அகிலத்தின் இலங்கை கிளையாக இருந்து வருவதோடு "போர்த் இன்டர்நஷனல்' அவ்வியக்கத்தின் அனைத்துலக சஞ்சிகையாகும். இச் சஞ்சிகை அனைத்துலக தொழிலாளர் வர்க்கம், இலங்கை தொழிலாளர் வர்க்கம் தொடர்பான கட்டுரைகளை கொண்டுள்ளன நாம் அறிவோம். இச் சஞ்சிகை மீதான தடையை அகற்றி அதனை விடுவிக்கும்படி நாம் மீளவும் வேண்டுகின்றோம்".

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய - இலங்கை உடன்படிக்கையால் ஏற்பட்டது பேரழிவும், பெரும் உயிரிழப்புமே.

தலவாக்கலை தோட்டத் தொழிலாளர்களுடன் நடாத்திய பேட்டி இங்கு பிரசுரமாகிறது; 'தொழிலாளர் பாதை' 'கும் சுறு மாவத்த' தோழர் ரி, என். நிகிஷான்னுடன் கலந்த வத்த இ.தொ.கா. தொழிற்சங்க அங்கத்தவர்கள் நானு ஓயா டிவிசன் இ.தொ கா. தொழிற் சங்க அங்கத்தவர்கள் முதலிய தொழிலாளர் தோழர்கள் இப்பேட்டியில் கலந்து கொண்டனர்.

கேள்வி: கடந்த ஆண்டில் கைச்சாத்தான இந்திய=இலங்கை உடன்படிக்கை பற்றிய தங்கள் கருத்து என்ன?

பதில்: இந்த ஒப்பந்தத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதை எம்மால் அங்கீகரிக்க முடியாது. ஏற்கனவே அநேக தொழிலாளர்களை இந்தியா செல்லும்படி கோரும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அத்தோடு இவ்வொப்பந்தத்தினுல் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளால் தொழிலாளர்களுக்கு எதுவித பயனும் இல்லை,

கேள்வி; அப்படியானுல் இந்த ஒப்பந்தத்தால் வட–கீழ் மாகாண மக்களுக்கு நன்மை ஏற்படுகின்றது என்பது தங்கள் கருத்து?

பதில்: அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை; உடன்படிக்கையால் அவர்களுக்கு பேரழிவும், பெருந்தொகையானேரின் உயிரிழப்புமே ஏற்பட்டது;

கேள்வி: சமசமாஜ, கம்யூனிச, இ.தொ.கா: தலைவர்கள் இந்த உடன்படிக்கைக்கு ஆதரவு காட்டுகிருர்கள்: அது சரியானதென நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: முற்றிலும் தவருனது; இந்த உடன்படிக்கையால் தொழிலாளர்களுக்கு எதுவித நன்மையும் கிடையாது. இவர்கள் வழங்கும் ஆதரவின் அடிப்படையிலேயே அரசாங்கம் தொழிற்படுகின்றது; இந்த ஆதரவினை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றேம்.

கேள்வி: புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த உடன்படிக்கைக்கு வழங்கும் ஆதரவினை நிராகரிக்க வேண்டும் என கூறுகின்றது. இது தொடர்பான தங்கள் கருத்து என்ன?

பதில்: இந்த தலைவர்கள் உடன்படிக்கைக்கு தரும் ஆதரவினை நிராகரித்து, அரசாங்கத்தில் இருந்து விலகி தொழிலாளர் வர்க்கத்துக்காகப் போராட வேண்டும் என்பதே எமது கருத்து.

கேள்வி: அவர்கள் எங்ஙனம் போராட வேண்டும்?

பதில்: தொண்டமான் முதலாளித்துவ அரசாங்கத்தில் இருந்து வெளியேறி ஏனைய தொழிலாள் வர்க்கத்துடன் இணைந்து போராட வேண்டும்.

கேள்வி: தொண்டமான் ஏனைய தொழிலாளர்களுடன் இணைந்து அங்ஙனம் போராடுவார் என நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்: அப்படி செய்யாவிட்டால் தோட்டத் தொழிலாளர்கள் அவரை நீக்கி சுயாதினமாகப் போராடவல்ல தலைமையை அமைக்க வேண்டும்.

கேள்வி: மாகாண சபைகள் சம்பந்தமான தங்கள் கருத்து என்ன?

பதில்: மாகாண சபைகள் மூலம் தொழிலாளர்களுக்கு எதுவும் கிடைக்காது. மாகாண சபைகள் பெயரில் எமக்கு குடியுரிமையும் மற்றும் உரிமைகளும் கிடைக்கும் என நானுவிதமான தலைவர்கள் கூறிவந்தார்கள். அதன் பின்னர் எந்தவொரு தலைமையையும் இப்பகுதிக்கு தலைகாட்டவேயில்லை.

கேள்வி: அரசியல் கைதிகளை விடுதலை செய்ய இத் தலைவர்கள் முன் வைக்கும் வேலைத் திட்டம் என்ன?

பதில்: தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் மாகாண சபையின் பேரில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தொண்டமான் மாகாண சபைகள் நிறுவப்பட்டதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகும் தொழிலாளர்களுக்கு செழிப்பான வாழ்க்கையை வழங்குவதாகவும் கூறினுர். அதன் பின்னர் இப்பக்கமே தொண்டமான் தலைகாட்டவில்லை.

கேள்வி: தலவாக்கலை பிரசித்தி பெற்ற இ.தொ க. தலைவரான சந்திரசேகரம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பொருட்டு தொடுத்த வேலைத்திட்டம் சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன?

பதில்: அந் நாட்களில் சந்திரசேகரம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினுர். ஆனுல் இன்று அவர் அது சம்பந்தமாக கவனம் செலுத்துவதாய் இல்லை. அவரைச் சூழ அணிதிரண்ட இளைஞர்களை கைவிட்டு அவர் இன்று மீண்டும் தொண்டமானுடன் இணைந்து கொண்டுள்ளார்;

கேள்வி: அரசியல் கைதிகளை விடுதலை செய்வது எப்படி?

பதில்: தொழிலாளர்கள் ஒன்றிணைந்து பொது வேலை நிறுத்தம் தொடுக்க வேண்டும்;

கேள்வி: தொண்டமான் குடியுரிமை பெற்றுத் தருவதாக கூறினுர். இன்று அது சம்பந்தமான நிலைமையை சற்று தெளிவுப்படுத்துவீர்களா?

பதில்: குடியுரிமை இல்லாமல் 460,000 பேர் உள்ளனர்; குடியுரிமை இல்லாததால் தொழில் செய்ய முடியாதவர்களும் அவர்களிடையே உள்ளனர்: இது சம்பந்தமாக தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அவை அனைத்துடன் பேச்சுடன் நின்றுவிட்டன. நடைமுறையில் நடந்தது ஒன்றும் இல்லை, 1987–88–20 குடியுரிமை பற்றிய கமிட்டி எமது தோட்டங்களுக்கு வந்தது: அதன் பின்னர் அது சம்பந்தமாக எந்த விபரமும் கிடையாது. 1964 நீண்ட காலத்துக்கு முன்னர் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு குடியுரிமை 1984லேயே கிடைத்தது.

கேள்வி: இந்தியாவுக்கு அனுப்பப்படும் தொழிலாளர்களின் நிலைமை என்ன?

பதில்: அநேகர் வீதிகளில் பிச்சை எடுப்பதாக அறிகிறேம். அங்கு சென்றவர்களுக்கு தொழில் இல்லை; எமது தோட்டத்தில் இருந்து சென்ற அழகன் என்ற தொழிலாளியின் குடும்பம் சேமநல சங்கத்தால் ஏமாற்றப்பட்டு அவரின் அனைத்தும் கரைந்து போயின

கேள்வி: இவை அனைத்துக்கும் தங்கள் தீர்வு என்ன?

பதில்: இந்தியாவுக்கு கட்டாயமாக நாடு கடத்துவதை நாம் எதிர்க்கின்றேம். எமக்கு குடியுரிமை வழங்கி சம உரிமையுடன் வாழ இடமளிக்கப்பட வேண்டும்.

கேள்வி: இவை அனைத்துக்கும் தொழிலாள வர்க்கம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமே தீர்வு காண முடியும் எனவும் தொழிலாள வர்க்க தலைவர்கள் முதலாளித்துவ தலைமைகளுடன் கொண்டுள்ள தொடர்புகளை முறித்துக் கொள்ள வேண்டும் என நாம் கூறுகின்றேம். தங்களின் கருத்து என்ன?

பதில்: கடந்த 40 ஆண்டுகளாக நாம் எதுவிதமான உரிமையையும் இல்லாமலேயே வாழ்ந்து வருகின்றேம். நீங்கள் முன்வைக்கும் கருத்து சரியானது. அதற்கு நாம் முழுமனே உடன்படுகின்றேம்.

## பர்மாவில் மக்கள்...

★ 1ம் பக்கத் தொடர்ச்சி

ஊனுவின் முதலாளித்துவ ஆட்சியையும் நேவின்னின் இராணுவ ஆட்சியையும் ஒழித்துக் கட்டினும் தற்போதைய இராணுவ சதியை எதிர்கொள்ளும் போது அடிப்படை காட்டிக் கொடுப்பு தொடர்பாக சோவியற், சீன ஸ்டாலினிச அதிகாரிகள் இயந்திரம் முற்றுக பொறுப்பேற்க வேண்டும்.

'சோசலிசத்தை நோக்கிய பர்மாவின் நடை'' என்ற பெயரால் மூடிமறைத்துவிட்ட நேவினின் சர்வாதிகாரம் முற்போக்கு ஆட்சியென வெள்ளையடிக்கப்பட்ட சோவியற் ஸ்டாலினிச இயந்திரத்தின் தற்போதைய தலைவரான மிகாயல் கொர்பச்சேவ் 1985 ஆகஸ்ட் பீ. எஸ் – பீ. பீ. சம்மேளனத்திற்கு வாழ்த்து செய்தி அனுப்பியது. அல்லாவிடில் மே மாதத்தின் பன்னிரண்டாவது தடவையாக சீனுவிற்கு விஜயம் செய்த நேவின் ஸ்டாலினிச தலைவர் டென் ஷியா ஓ பிங்கையும், கம்யூனிச கட்சிச் செயலாளர் கூ.யா.ஓ. பான்னையும் சந்தித்தான்.

பர்மிய தொழிலாளரையும் வறிய விவசாயிகளையும் காட்டிக் கொடுக்கும் இந்த ஸ்டாலினிச நடவடிக்கைக்கு பிரதான பக்கபலமாக பப்லோவாத திரிவுவாதம் செயற்பட்டது.

1953 ஆண்டுகள்களில் பப்லோவாத சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாத தலைமைகளில் பர்மிய முதலாளித்துவம் பற்றிய நப்பாசைகளை வளர்த்து கீழ்வரும் காரணம் கொண்ட தீர்மானத்தை கட்சிக்குள் சமர்ப்பித்துள்ளனர்

''தொழிலாள வர்க்க கண்ணேட்டத்தை கொண்ட கட்சிகளின் கலந்து கொள்வது மிக வெளிப்படையாக காட்டப்படும் பர்மாவில், தேசிய விடுதலையையும் மீறி, ஏகாதிபத்திய வாதத்திலிருந்து அரசியல் ரீதியில் விடுபடுவதால் மட்டுமன்றி வெளிநாட்டு வங்கிகளையும் வர்த்தகத்தை தேசியமயப்படுத்துவதால் வெளிநாட்டு பொருளாதார பீடையிலிருந்து விடுபடுவதையும் அடங்கியுள்ளது''. (வில்லியம் சில்வா, ஹென்றி பீரிஸ், பிரிடோகா, பண்டிக சமர்ப்பித்த யோசனை)

இந்த பப்லோவாதிகள் நேவினின் அரசாங்கத்தை முற்போக்கு அரசாங்கமாக வெள்ளையடித்து தொழிலாளரையும் வறியவர்களையும் அடக்க உதவியளித்தனர்.

பர்மிய தொழிலாளரதும் விவசாயிகளதும் புரட்சிகர எழுச்சியை வெட்டிச்சாய்க்கும் பெரும் பொறுப்பு மா ஓ வாத பர்மிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு (பீ.சி பீ.)க்குள் உண்டு. காம்போஜத்தில் பால்பொட் கொலைகார அரசியலை நோக்கி அபிவிருத்தியுற்ற மா. ஓ. வின் ''கிராமத்திலிருந்து நகரம் வரை'' புரட்சியை முன்னெடுத்து செல்லும் கொள்கையை பீ சி பீயின் கொள்கையாகும். சர்வாதிகாரத்திற்கு எதிராக முதலாளித்துவ 'ஜனநாயகத்தை' ஏற்படுத்தும் பொருட்டு முதலாளித்துவ குழுக்கள் ஏனைய குட்டி முதலாளித்துவ கட்சிகளுடன் பீ சி.பீ.யை இந்து செயற்படுகின்றது. இது ஸ்டாலினிஸ்டுகளது இருபுடை சார்பு அரசியலாகும். முன்னாள் பீ.சி பீ தலைமைசளான தாசின் சோ தனது மரணப் படுக்கையில் 'பல கட்சி முறை சனநாயகத்தை'' ஏற்படுத்த அழைப்பு விடுத்தார்.

பர்மாவின் இராணுவ ஆட்சியும் மக்கள் எழுச்சியும் தற்போது மீண்டுமொரு தடவை இராணுவத்தை மக்கள் எழுச்சியை இரத்தத்தில் மூழ்கடிக்க செய்யும் பொருட்டு பயன்படுத்தும் முயற்சியை காட்டுவது, அரைக் காலனித்துவ நாடுகளில் ஏகாதிபத்திய பீடையையும் அதன் வால் பிடியான பாணியிலான முதலாளித்துவ ஆட்சியையும் அகற்றவல்ல வறிய விவசாயிகளதும் ஏனைய சிறு மக்கள் குழுக்களதும சனநாயக உரிமைகளை தீர்க்கவல்ல ஒரேயொரு வர்க்கம் தொழிலாள வர்க்கமேயாகும் என்பதையேயாம், பாட்டாளிவர்க்கமானது இந்த ஒடுக்கப்பட்ட மக்கட் குழுவின் ஆதரவை பெற்று தமது கைகளில் ஆட்சியை ஏற்று சோசலிச வேலைத் வேலைத்திட்டத்தையும் சனநாயக திட்டத்தையும் செயற்படுத்தவேண்டும். ஏனையவை முதலாளித்துவ பெருநிக்கிடங்குகள் தொழிலாள வர்க்கப் வறிய மக்களை அடக்க வைக்க போடப்படும் பொருட்டு செய்யப்படும். உலக சோசலிச புரட்சியின் ஓர் பகுதியாக பர்மிய தொழிலாள வர்க்கம் சோசலிச புரட்சியை நோக்கி முன் செல்லவேண்டும்.

இந்த வழியை சமர்ப்பிப்பது நான்காம் அகில அனைத்துலக குழுவு மட்டுமேயாகும். பர்மாவினுள் தொழிலாள வர்க்க தலைமைகளின் நெருக்கடியை தீர்க்க அனைத்துலக குழுவின் கிளையை கட்டியெழுப்புவதை தவிர வேறு வழி கிடையாது. இராணுவ சதியினுல் அடக்கப் பெறும் மிரட்டலை எதிர்கொண்டுள்ள லட்சக்கணக்கான தொழிலாளருக்கு இளைஞருக்கும் ஏனைய வறியவர்களுக்கும் வேறு வழி கிடையாது.

தொழிலாள வர்க்கத்தினதும் வறியவர்களதும் சுயமான, புரட்சிகர போராட்டங்கள் தாளுகவே முக்கிய அரசியல் பிரச்சினையை திர்த்துவிட முடியாது. அதற்காக அவ்வுருவமுள்ள மார்க்ஸிய தலைமைத்துவத்தை கட்டியெழுப்பவேண்டும்.

பர்மிய மக்கள் எழுச்சியினுல் படிப்பினையை பெறுமாறும் புரட்சிகர தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப புரட்சி கட்சியில் இணையுமாறும் சகல தொழிலாள இளைஞர்களை நாம் அழைக்கிறேம்.

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர்களின் பிரச்சார இயக்கத்தின்

# 'நான்காம் அகிலம்' சஞ்சிகை விடுவிக்கப்பட்டுள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேண்டுகோளின் பேரில் தொழிலாள வர்க்க இயக்கங்கள் தொடுத்த பிரச்சார இயக்கத்திருந்து யூ.என்.பி. அரசாங்கம் 'நான்காம் அகிலம்' சஞ்சிகையை விடுவிப்பதற்கு [illegible] விடுவிக்கப்பட்டது. சஞ்சிகை [illegible] விடுவிக்கப்பட்டுள்ளது [illegible] கம்யூனிஸ்ட் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

எங்களுடைய இந்த பிரச்சார இயக்கத்திற்கு [illegible] தொடுத்த சகல இயக்கங்களுக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தத்துவார்த்த சஞ்சிகையான 'நான்காம் அகிலத்தை' யூ.என்.பி. அரசாங்கம் தடை செய்ததன் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு மாத்திரமல்ல, முழுத் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கும் தாக்குதலை தொடுத்துள்ளது. யூ.என்.பி. அரசாங்கத்தின் சர்வாதிகார நடவடிக்கைகளை தோற்கடித்து ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க சகல போராளிகளும் முன் வரவேண்டும்.

'நான்காம் அகிலம்' சஞ்சிகையின் ஆசிரியரும், அமெரிக்க லேபர் லீக்கின் பொதுச் செயலாளருமான தோழர் டேவிட் நோர்த் சஞ்சிகையை உடன் விடுவிக்குமாறு யூ.என்.பி. அரசாங்கத்திற்கு தந்தி அனுப்பியிருந்தார். அதில் குறிப்பிட்டிருப்பதாவது 'நான்காம் அகிலம்' சஞ்சிகையை தடைசெய்ததை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இந்தத் தடையை ரத்துச்செய்து சஞ்சிகையை உடன் விடுவிக்குமாறு கோருகின்றேன். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியப் பகுதியான சோசலிச லேபர் லீக்கின் பொது செயலாளர் சஞ்சிகையை உடன் விடுவிக்குமாறு அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வேண்டுகோளை கையளித்திருந்தார், அதேபோல் மேற்கு ஜேர்மனி பி.எஸ்.ஏ. கட்சியும் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இலங்கையிலும் லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, மத்திய வங்கி ஊழியர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவை சங்கம், கைத்தொழில் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சங்கம், இலங்கை கூட்டுறவு ஊழியர் சங்கம், இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம், இலங்கை உள்நாட்டு இறைவரி சேவை சங்கம் சஞ்சிகையை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது.

# இந்திய இலங்கை உடன்படிக்கை . . .

★ 2ம் பக்கத் தொடர்ச்சி

தூவதைவிட வேறு வழியில்லை என உணர்ந்தனர். இந்த உடன்படிக்கையின் சாராம்சத்தையிட்டு அவருக்குப் பலத்த ஆட்சேபனைகளை வெளியிட்ட போதிலும், இந்தியாவின் திடசங்கற்பத்துக்கிடையே வேறு பதிலீடு கிடையாது என்பதை உணர்ந்தார்.''

ஏகாதிபத்தியவாதிகள் மனதில் கொண்டிருந்த மற்றைய சாத்தியமானது, தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்ப்புக் காட்டுமிடத்து ஒரு நீண்ட திட்டமிடப்பட்ட யுத்தம் நடாத்துவதே. எதிர்ப்புக் காட்டுமிடத்து விடுதலைப் போராட்டத்தினை இந்திய முதலாளி வர்க்கம இரும்புக் கரங்களால் பணிய வைக்கும் என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முன்னரே சொல்லி வைத்ததை இந்தக் கலந்துரையாடல் தெளிவாக்குகின்றது.

சொலாஸ் தமது சகாக்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்தும் பொருட்டு கீழ்க்காணும் கேள்வியை எழுப்புகின்றார்: இவ் விடயத்தை (எல்.ரீ.ரீ.ஈ. உடன்படிக்கைக்கு இணங்க சம்மதிக்கின்றது என்பதை) உடன்படிக்கைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு, [illegible] த் தீவிரமான தொடர்ச்சிக்கு இந்திய எதிர்ப்பு இருக்கும் நிலையில் ஆட்சிக் கொள்கை நின்று பிடிக்குமா? இது அவரின் (பிரபாகரனின்) அபிப்பிராயத்துக்குள்ளாக வேண்டும் என நான் நினைக்கின்றேன்.''

இந்த ஏகாதிபத்திய சதிகாரக் கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்ட இன்னுமோர் விடயம், அமெரிக்கா இந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தது மட்டுமன்றி இதன் அமுலுக்கும் உடந்தையாகவிருந்தது. [illegible] தொடர்ந்து [illegible] இலங்கை [illegible] காட்டுவோம். [illegible] தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு எவற்றை வழங்கலாம் என நாமே ஆய்ந்து கொண்டுள்ளோம். கடந்த காலத்தில் நாம் பன்முகப்பட்ட புனர் வாழ்வு நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் எமது தயார் நிலையை அறிவித்ததோடு அத்தகைய ஒரு முயற்சியில் இலங்கை அரசாங்கத்தினதும் உலக வங்கியினதும் நிலைமையை எதிர் பார்த்தோம்.''

இலங்கையில் [illegible] பிறந்த அரசியல் பாதுகாப்பில் தாம் காந்தியுடன் ஒரு பொது நலனைக் கொண்டுள்ளதை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நன்கு அறிந்திருந்தனர் என்பதை இக் கலந்துரையாடல் நன்கு தெளிவுபடுத்துகின்றது. சொலாஸ் குறிப்பிடுவதாவது: 'பிரதமர் காந்தி திரும்பத் திரும்ப [illegible] தெளிவுபடுத்தினார் என நான் நினைக்கின்றேன். என்ன தீர்வினைக் கண்டாலும் அது சகலவிதமான வெளிப்படையான காரணங்களின் பேரிலும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டின் வரம்பினுள் செய்யப்படவேண்டும். அங்குள்ள பிரச்சினைகளும், [illegible] உள்ள போக்குகளும் இலங்கையில் பிராந்திய பிரச்சினைகள் சிறிதளவும் ஊக்குவிக்கப்படக் கூடாது. பிரதமர் காந்தி அத்தகைய உணர்வுகளை உண்மையில் நேர்முறையான தாக விடமாட்டார்.'

இந்திய இராணுவம் தமிழ் தாயகத்தில் எவ்வளவு காலம் தங்கி இருக்கவேண்டும் என அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் [illegible] கிறார்கள்? ஏகாதிபத்தியத்தின் சார்பில் சம்பந்தப்பட்டும் கொண்டதாகவே காந்தியை தாராளமாக புகழ்ந்து பாராட்டுகையில் பெக் கூறுவதாவது: 'ஒரு அசாதாரணமான சிக்கல் நிறைந்த விடயத்தில் இது துணிச்சல் நிறைந்த ஒரு விதத்தில் இந்தியா வை ஈடுபடுத்திக் கொள்ளும் பொருட்டு முனைந்த பட்சம் அடுத்துவரும் 18 மாதங்களுக்கு விடயங்களைச் செயற்படவைக்க இந்தியாவின் தொடர்ச்சியான முயற்சி வேண்டியிருக்கிறது.''

## காட்டிக்கொடுப்பு

2500க்கும் மேலான அப்பாவி தமிழ் குடிமக்கள் கொல்லப்பட்ட பின்பும், தமிழ் தாயகம் முழுவதும் இந்திய இராணுவ வாகனங்களால் சிதைக்கப்பட்ட பின்பும் யாழ்ப்பாண சனத்தொகையில் ஒவ்வொரு மூவருள்ளும் ஒருவர் வசிப்பிடம் இல்லாதவராக்கப்பட்ட பின் எண்ணற்ற யாழ்ப்பாணப் பெண்கள் கற்பழிக்கப்பட்ட பின்பும் நூற்றுக் கணக்கான போராளி இளைஞர்கள் தமது உயிர்களை யுத்தத்தில் பலி கொடுத்த பின்பும், தமிழீழ விடுதலைப் புலிகளின் குட்டிமுதலாளித்துவ தலைவர்கள் வெட்கமின்றி கூறுவது இதுதான்:

''தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் இந்திய அரசாங்கத்துடனான மோதுதலை தவிர்ப்பதன் அவசியத்தினை அங்கீகரித்து வந்துள்ளது. தமிழர் நலன்கள் பேணப்படுமாயின் உடன்படிக்கையை அமுல் செய்ய எமது ஆதரவை வழங்க தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகவுள்ளது.'' (இந்திய-இலங்கை உடன்படிக்கையின் ஓராண்டு நிறைவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின அறிக்கை)

லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திலகர் கீழ்கண்ட அறிக்கையை ஒரு மகாநாட்டில் வெளியிட்டார்; ''எமது விடுதலை இயக்கம் இந்தியாவின் நலன்களுக்கு எதிரானதல்ல. தென்னாசியாவின் பிராந்திய வல்லரசாக தன்னை நிலை நாட்டிக் கொள்ளும் இந்தியாவின் மூலோபாய நோக்கங்களுக்கு நாம் எந்த விதத்திலும் எதிரானவர்கள் அல்லர். நாம் எப்போதும் இந்தியாவின் நேச சக்தியாகவே தொழிற்பட்டுள்ளோம், தொடர்ந்தும் தொழிற்படுவோம். இந்தியாவின் புவியியல் அரசியல் நலன்களை அடைவதையே நோக்கமாகக் கொண்ட இந்திய – இலங்கை உறவுகளுக்கு கட்டுப்பட்டதாக உடன்படிக்கை இருந்திருக்குமேயாயின் நாம் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு எமது நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கியிருப்போம்.''

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் இது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை பூரணமாக நிராகரிப்பதாகும். சுயநிர்ணய உரிமையானது அடிப்படையில் வெளிச் சக்திகளின் தலையீடு இல்லாமல் தேசிய இனத்தின் சொந்த எதிர்காலத்தை நிர்ணயம் செய்துகொள்ளும் உரிமையைக் குறிக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இப் பிராந்தியத்தில் இந்திய பாதுகாப்பு நலன்களை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக ஏற்றுக் கொள்ளும் அதே கணத்திலேயே அது தான் அடைய எதிர்பார்க்கும் அரசு தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை நடவடிக்கையின் ஒரு பெறுபேறுவன்றி இந்திய முதலாளி வர்க்கத்தின் ஒரு குத்தகைக் காணி என்பதை முன்னரே அங்கீகரித்து விடுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் காரியாளர்களின் வீரமிக்க சுயதியாகமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கறக்கக்கூடிய எந்தவொரு நப சலுகைக்காகவும் பேரம் பேசும் பொருட்டு இந்திய முதலாளி வர்க்கத்தின் மேல் நெருக்குவாரம் கொணர்வதற்கான ஒரு மூலமாகத் தரமிறக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தையில் கூறின் அவர்களின் மூலோபாயம் முதலாளி வர்க்கத்துடன் பேரம் பேசுவதே. 'வீரம் நிறைந்த போராட்டம்' ஒரு உபாயம் மட்டுமே.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் காட்டிக் கொடுப்பினை பூரணத்துவம் செய்யும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள், உப கண்டத்தில் ஏகாதிபத்தியத்தினதும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் முக்கிய ஏஜன்டுகள் இந்திய முதலாளி வர்க்கமே என்ற உண்மையை அடியோடு மூடிமறைத்தனர். ஏனைய சகல ஏகாதிபத்தியவாதிகளும் உடன்படிக்கைக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர் என்பதை குறிப்பிட வேண்டியதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வங்குரோத்து, முதலாளித்துவ உற்பத்தி முறை உலகளாவிய விதத்தில் நிலைநாட்டப்பட்டு, முதலாளி வர்க்கம் எங்கும் தொழிலாள வர்க்கத்தினால் எதிர் கொள்ளப்பட்டுள்ள இன்றைய நவீன உலகில் எவ்வளவுதான் தீவிரவாதமானது எனக் கூறப்பட்டபோதிலும் முதலாளி வர்க்கத்தின் எந்தவொரு பகுதியினரும் உறுதியான ஒரு ஜனநாயக நிலைப்பாட்டினை எடுக்க இலாயக்கற்றது என்ற புகழ்பெற்ற தொற்றப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. எந்தவொரு சூழ்நிலையின் கீழும் இது புரட்சிகரமானதாக காட்டிக்கொள்ள முயலுமாயின் அது காட்டிக் கொடுப்புக்காக வெகு ஜனங்களை ஏமாற்றுவதற்காயாகும்.

ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டமை அனுபவமின்மையாக அர்த்தப்படமுடியுமானால் இந்திய முதலாளி வர்க்கத்திடம் இன்றைய அடிபணிவுக்கு அத்தகைய சமாதானத்துக்கு இடமேயில்லை.

இந்திய இலங்கை உடன்படிக்கையின் ஓராண்டின் பின்னர், அனைத்து நாசங்களும் செய்யப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய முதலாளி வர்க்கத்தின் 'முறையாகு' பண்பினைப் பற்றி பேசுவதானது, தமிழ் தேசிய இனத்தை மட்டுமன்றி இலங்கை இந்தியா இருநாடுகளிலும் உள்ள அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் காட்டிக் கொடுப்பதற்கு நிகரானது.

— தொடரும்

**திருத்தம்**

நடுப் பக்கங்களில் திகதியை செப்டம்பர் 30 என திருத்தி வாசிக்கவும்.

— ஆசிரியர்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — [illegible] விகாரகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாசஹவத்த வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்